பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 12 வியாழக்கிழமை (27 - 07 - 2000) VALAMPURI ஒலி: 220

★ இனப்பிரச்சினை விவகாரத்தில்

# ஐ.தே.கட்சியின் 'நழுவல்' போக்கிற்கு தமிழ்க்கட்சிகள் கண்டனம்தெரிவிப்பு

(கொழும்பு விசேட நிருபர்)

**உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்தசட்டமூலத்தை தமிழ்க்கட்சிகள் நிராகரித்துள்ளமையினால், சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது அதனை எதிர்த்து வாக்களிப்போம் என்று ஐக்கியதே சியக்கட்சிகூறுவது.இனப்பிரச்சினைக்கானதீர்வில் கட்சியின் நழுவல் போக்கை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.**

**உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்த சட்டமூலத்தை பாராளுமன்றில் எதிர்க்கப் போவதாக ஐக்கிய தேசியக்கட்சி கூறியிருப்பது தொடர்பாக தமிழ்க்கட்சித் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.**

அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே இடம் பெற்ற பேச்சு வார்த்தையின் பின்பே தமிழ்க் கட்சிகளுடன் பேசி இணக்கம் காணப்பட்ட விடயங்களில் மாற்றங்களை அரசு ஏற்படுத்தியிருப்பதாக ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளரும் யாழ் மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த காலங்களில் தீர்வுத்திட்டங்கள் ஜனநாயக வழியில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன; ஆனால் மாறிமாறிவரும் சிங்கள ஆட்சியாளர்களினால் இனப்பிரச்சினை சிக்கலாக்கப்பட்டது;

காணி தொடர்பாகவும், வடக்குக் கிழக்கு இணைப்பு தொடர்பாகவும்இடைக்கால

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 5-ம்ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆவணங்கள் தபால் மூலம் அனுப்பிவைப்பு!

(கொழும்பு)

ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஐந்தாம் ஆண்டுபுலமைப்பரிசில் பரீட்சைக்கான பரீட்சை இலக்கங்கள் உள்ளிட்ட சகல ஆவணங்களும் பாடசாலை அதிபர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்

[8ஆம் பக்கம் பார்க்க)

## விறகுவெட்டச்சென்றபெண் மிதி வெடியில் கால் இழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஆண்கள் விடுதிக்கு அருகாமையில் நேற்று இடம்பெற்ற மிதி வெடிச் சம்பவமொன்றில் குடும்பப் பெண் ஒருவர்தனது வலது காலை இழந்துள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு

[8ஆம் பக்கம் பார்க்க]

★ ஜேர்மனியிலிருந்து தமிழ் அகதிகளை

## திருப்பி அனுப்ப வேண்டாமென கோரி கூட்டணி தூதுக்குழு ஜேர்மன் பயணம்

(கொழும்பு)

ஜேர்மனியில் புகலிடம் கோரி விண்ணப்பித்த இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று கோருவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு நேற்று ஜேர்மனிக்கு பயணமாகியுள்

( 8ஆம்பக்கம் பார்க்க)

## அரசின் முதலாவது பிரசாரக் கூட்டம்

[கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் அடுத்த மாதம் 4ஆம் திகதி அநுராதபுரத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம். ஜெயரத்தின தெரிவித்துள்ளார். [வ]

## சந்திரிகா அரசு பதவிவிலகவேண்டும் அடுத்த அரசை நாமே அமைப்போம்

(சிலாபம்)

நாட்டில் தற்போது ஏறி வரும் விலைவாசி உயர்வைக் கண்டித்தும், நேற்று சிலாபத்தில்ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி நடாததியது.

சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயம் அருகில் நடத்திய

(8ஆம் பக்கம் பர்ர்க்க)

★ வன்னி மாவட்டத்திற்கு

## 12. 9 மில். ரூபா நிலுவை பணம் அனுப்பி வைப்பு'

## றொனிடிமெல்லுக்கு கைத்தொழில் அமைச்சர் பதவி?

(கொழும்பு)

லண்டன் சென்றுள்ள முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சி எம்.பியு ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது லண்டனில்

## கோப்ரலுக்கு

## 12.9 மில். ரூபா நிலுவை பணம் அனுப்பி வைப்பு!

(வவுனியா)

வன்னிமாவட்ட அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோருக்கு சம்பள நிலுவைப்பணம் வழங்குவதற்கென 12.9 மில்லியன் ரூபா வடக்குக் கிழக்குமாகாண சபையின் பிரதம செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு முதல் 2 00 ஆண்டு வரைக்கான நிலுவைப்பணமே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (வ)

## தனியார்துறை ஊழியர்களுக்கும் 400 ரூபா சம்பளஉயர்வு?

தனியார்துறை ஊழியர்களுக்கும் 400 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

அவசரகால சட்ட விதிகளின்கீழ் அதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கிறதா என்று ஆராயுமாறு தொழில் அமைச்சர் ஜோன் செனிவிரத்தின சட்டமா அதிபரைப் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## போலி சி.ஐ.டி.களிடம் ஏமாறவேண்டாம்!

### -நல்லுறவுப்பணிப்பாளர் வேண்டுகோள்

(கொழும்பு)

அப்பாவிப் பொதுமக்களிடம் பணம்பறிக்கும் கும்பலொன்று கொழும்பிலுள்ள பல்வேறு பகுதிகளிலும் நடமாடுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது ரி.வி நாடகங்களில் பொலிஸ் வேடம் போடுபவர்கள் சி.ஐ.டி பொலிஸ் என தங்களை அடையாளம் காட்டி பொதுமக்களை ஏமாற்று [8 ஆம் பக்கம் பார்க்க)

வித்துள்ளார். [வ]

## கோப்ரலுக்கு ஒருவருட சிறை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் பாலியல் வல்லுறவு புரிந்தார் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவ கோப்ரல் ஒருவருக்கு ஒருவருட கடும்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அளுத்கெத சிசில் வசந்த என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது[ ந-12]

லண்டன் சென்றுள்ள முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சி எம்.பியுமான றொனிடி மெல் நாடு திரும்பியதும் அவருக்கு கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் பதவி வழங்கவுள் முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது லண்டனில் உள்ள றொனிடிமெல் அடுத்த வாரமளவில் நாடுதிரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (வ)

## சரசாலையில் மோதல் படையினரில் நால்வர் காயம்

(கொழும்பு)

தென்மராட்சி, சரசாலைப் பகுதியில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே நேற்று இடம்பெற்ற மோதலில் இராணுவத்தரப்பில் நால்வர் காயமடைந்துள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இம்மோதலின் போது [8ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி நாடு திரும்பிய பின்பே அடுத்த கட்டப் பேச்சு வார்த்தை!

(கொழும்பு)

உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்குமிடையே இன்று இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டன் சென்ற ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாடு திரும்பிய பின்பே பேச்சுவார்த்தைக்கான திகதி நிர்ணயிக்கப்படவிருப்பதாக அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியும் அரசாங்கமும் இன்று சந்தித்துப் பேசுவதென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இப்பேச்சில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்திருந்தார்.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகாவும் லண்டன் சென்றிருப்பதனால் பேச்சுவார்த்தை பின்தள்ளப் படிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யூனியன் கல்லூரி சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

அன்மையில் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பத்தொன்பது வயதுக்குட்பட்டவருக்கான ''கிரிக்கெட்'' சுற்றுப் போட்டியில் யா/ யூனியன்கல்லூரி யாழ் மாவட்டச் சம்பியனானது.

இதேவேளை யாழ்.மத்திய கல்லூரி இரண்டாம் இடத்தையும் யாழ்.இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

## தமிழ்த்தின போட்டி

[இணுவில்]

யாழ்ப்பாண கல்வி வலயத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் இன்றும், நாளையும் யாழ்ப்பாண வைத்தீஸ்வராக் கல்லூரி' இந்துமகளிர்கல்லூரி ஆகியவற்றில் காலை 9 மணிக்கு நடைபெறும்

(த-49)

## பொதுச்சந்தை அமைப்பு

(இணுவில்)

இணுவில் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய மரக்கறி சந்தை கொட்டகை துரித கதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இச் சந்தைச் செயற்பாடுகள் ஆரம்பமானதும் மருதனார் மடம் பொது சந்தை இட நெருக்கடி ஓரளவு குறைக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. (த-49)

## நாய்களுக்கு நோய்த் தடுப்பூசி

[மந்திகை]

பருத்தித்துறை சுகாதார அதிகாரி பணிமனைக்குட்பட்ட துன்னாலை, உடுப்பிட்டி ஆகிய பிரிவுகளில் உள்ள நாய்களுக்கான நோய்த்தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

இத்தடுப்பூசியானது இம் மாதம் 28 ஆம் திகதி துன்னாலையிலும், அடுத்த மாதம் 10 ஆம் திகதி உடுப்பிட்டியிலும் வழங்கப்படுமென பருத்தித்துறை சுகாதாரப்பணிமனை தெரிவித்துள்ளது. [த-23]

## பயிற்சி நெறிகள் மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இடம் பெற்ற அசம்பாவிதங்களினால் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மின்னியியல் அடிப்படைப் பயிற்நெறி மனையியல், டிப்ளோமா பயிற்சி ஆகியன எதிர்

# வட பகுதி வேலைத் திட்டங்களிற்கு 776.3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இவ்வாண்டு மேற்கொள்வதற்கான வேலைத் திட்டங்களுக்கு ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய டக்ளஸ் தேவானந்தவின் அனுசரணையுடன் வடக்கில் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபை (நரான்) நிதி ஒதுக்கியுள்ளது.

இவ்வேலைத் திட்டத்தில் மாதாந்தம் தேவைப்படும் பணத்திரட்சி மீள்குடியேற்றத்திற்கும், வீடமைப்பிற்கும் நட்டஈட்டிற்குமாக வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து மில்லியனுக்கு மேற்படாத புதிய கருத்திட்டங்கள்; மீனவ குடும்பங்களுக்கான விசேட வீடமைப்புத் திட்டம் என்பன அமைச்சரவை அங்கீகாரத்திற்கு விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது:

இவ்வாண்டுக்கானவேலைத் திட்டத்தில்

★ விவசாயத் தேவைகளுக்காக 80,00000 ரூபாவும் 8 மில்லியன் பெருமளவிலான நீர்ப்பாசனத்திற்கு 82 மில்லியன் ரூபாவும்,

★ வியாபார தொழிற் தேவைகளுக்காக 28,500000 ரூபாவும்,

★ மனித மீள் குடியேற்றத்திற்கு 50 மில்லியன் ரூபாவும்

★ நீர்ப்பாசன சாதனங்களுக்காக 50,00000 ரூபாவும்

★ மீள்குடியேற்ற கொடுப்பனவுகளும் வீட்டுச் சேதாரங்களுக்கான கொடுப்பனவுகள் 255 மில்லியன் ரூபாவும்,

★ மீனவர்களுக்கான தொழில் வள உபகரண உதவிகள் 347.6 மில்லியன் ரூபாவும்,

★ வீதிகள் பராமரிப்பும் திருத்தத்திற்கும் 108.7 மில்லியன் ரூபாவும்,

★ பிரதான வீதியும் மதகுகள் திருத்தத்திற்கு 50 மில்லியன் ரூபாவும்,

★ போக்குவரத்துச்சபை, டிப்போ மத்திய பஸ்நிலையம், அலுவலர்கள் தங்கும் அறை போன்றவற்றிற்கான செலவினங்களுக்கு 4 மில்லியன் ரூபாவும்

★ சமூக சேவைகளான, கல்விக்கு 28 மில்லியன் ரூபாவும்,

சுகாதாரத்திற்கு 54 5மில்லியன் ரூபாவும்,

சமூக கலாச்சார சேவைகளுக்காக 30 மில்லியன் ரூபாவும்,

மாவட்ட நிர்வாக சேவைக்கான கொடுப்பனவுகளுக்காக 3 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மேற்குறித்த புனர்வாழ்வுப் பணிகளுக்காக யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால்உதவு தொகையாக 90 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது:

அனைத்துப் பணிகளுக்குமான மொத்த முதலீட்டு செலவினமாக 77.6 மில்லியன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரணமானார்

(சங்கானை)

மாதகல் பகுதியில் பனையில் ஏறி கள்ளெடுத்த சமயம் தவறுதலாக கால் தடக்கி விழுந்ததனால் குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

இவர் பனையிலிருந்து வீழ்ந்து, பலத்த காயங்களுடன் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற வேளையில் மரணம் அடைந்தார்.

45வயதுடைய ம: இராசதுரை என்பவரே மரணமானவர் ஆவர். இவர் இரு பெண் குழந்தைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(த-16)

## யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க பிரதிநிதிகள்- ஜெகன் எம். பி. சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதி நிதிகள் தமது கோரிக்கைகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட ஈ.பி.டி பி அமைப்பாளருமான கே.வி. குகேந்திர (ஜெகன்)னைச் சந்தித்து உரையாடினர்.

இக்கலந்துரையாடலில் வெற்றிடமாகவுள்ள ஆசிரியர் பதவிக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்குவடக்குகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும், வெற்றிடமாக உள்ள ஏனைய துறைகளுக்கும் பட்டதாரிகளை நியமிப்பது தொடர்பாகவும் உறுதி அளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க-03)

## பரீட்சை நிலைய மாற்றங்கள்

யாழ்:குடா நாட்டில் எதிர் வரும் 31 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க: பொ:த. உயர் தரப் பரீட்சையை முன்னிட்டு மாணவர்களின் வசதி கருதி பின் வரும் பரீட்சை நிலையங்கள் மாற்றப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில்அமைக்கப்பட்டுள்ள மண்டபம் -01 யாழ். இந்துக் கல்லூரி, மண்டபம் -02 யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்திற்கும் இடம் மாற்றப்பட்டுள்ளன:

அத்துடன் தென்மராட்சி, பளைப் பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்து வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் தங்கியிருக்கும் க.பொ.த. உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் வசதி கருதி யாழ்ப்பாணத்திலும், வலிகாமத்திலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் என்றுவலயக் கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

## 'லீலையில்' ஈடுபட்ட பௌத்தபிக்கு அடிகாயத்துடன் ஆஸ்பத்திரியில்

(கண்டி)

கண்டி மாவட்ட கடுகஸ் தோட்டப்பகுதியில் இளம் பிக்கு ஒருவர் இரவு வேளையில் பெண்ஒருவருடன்இருந்த போது ஊரவர்களினால் கண்டுபிடிக்கப்பட்டு ...

கண்டி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட பெண்ணை பொலிஸார் கடுமையாக எச்சரித்து விடுதலை செய்தனர்.

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 143861 ஏ | 143861 பி |
| 143861 சி | 143944 ஏ |
| 143944 பி | 143951 ஏ |
| 143951 பி | 143951 சி |
| 143951 டி | 143951 ஈ |
| 143994 ஏ | 143994 பி |
| 143994 சி | 143994 டி |
| 143994 ஈ | 143994 எவ் |
| 150425 ஏ | 150425 பி |
| 150425 சி | 150425 டி |
| 150490 ஏ | 150490 பி |
| 150491 ஏ | 150491 பி |
| 153221 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 137034 ஏ | 137034 பி |
| 137034 சி | 137034 டி |
| 137034 ஈ | 144410 ஏ |
| 144410 பி | 144410 சி |
| 144464 ஏ | 144464 பி |

| | |
|---|---|
| 152574 ஏ | 152581 ஏ |
| 152581 பி | 152581 சி |
| 152581 டி | 152584 ஏ |
| 152584 பி | 152584 சி |
| 152584 டி | 152640 ஏ |
| 152640 பி | 152640 சி |
| 152640 டி | 152640 ஈ |
| 152650 ஏ | 152650 பி |
| 152650 சி | 152668 ஏ |
| 152679 ஏ | 152679 பி |
| 152679 சி | 152689 ஏ |
| 152689 பி | 152689 சி |
| 152689 டி | 152689 ஈ |
| 152700 ஏ | 152709 ஏ |
| 152709 பி | 152709 சி |
| 152749 ஏ | 152749 பி |
| 152753 ஏ | 152834 ஏ |
| 152882 ஏ | 152882 பி |
| 152904 ஏ | 152920 ஏ |
| 152920 பி | 152944 ஏ |
| 152944 பி | 152968 ஏ |
| 152977 ஏ | 152977 பி |
| 152977 சி | 152977 டி |
| 152988 ஏ | 152988 பி |
| 152988 சி | 153001 ஏ |
| 153001 பி | 153001 சி |
| 153001 டி | 153014 ஏ |
| 150428 ஏ | 150428 பி |
| 150428 சி | 153502 ஏ |
| 153502 பி | |

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இடம் பெற்ற அசம்பாவிதங்களினால் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மின்னியியல் அடிப்படைப் பயிற்நெறி மனையியல், டிப்ளோமா பயிற்சி ஆகியன எதிர் வரும் 29ம் திகதி சனிக்கிழமை யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள கூட்டுறவு மகளிர் பயிற்சி நிலையத்தில் நடை பெறவுள்ளது. (வ)

## திருத்தப்படாத வீதி

(இருபாலை)

கட்டப்பிராய் வீதி நீண்ட காலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக போக்கு வரத்துக்கு சிரமமாக காணப் படுகிறது

இவ்வீதியை திருத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்டோருக்கு தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-2)

## வீதிக்கு பெயர் சூட்டல்

(இணுவில்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் அமைந்துள்ள வீதி யொன்றுக்கு மறைந்த வைத்தியகலாநிதி ஆ. நடராஜாவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இவ்வீதியினை அண்மையில் வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.மா.செல்வராஜா திறந்து வைத்தார். (த-49)

(கண்டி)

கண்டி மாவட்ட கடுகஸ் தோட்டப்பகுதியில் இளம் பிக்கு ஒருவர் இரவு வேளையில் பெண்ஒருவருடன்இருந்த போது ஊரவர்களினால் கண்டுபிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டதாக தெரி விக்கப்படுகிறது.

இச்சம்பவம் கடந்தஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. தாக்குதலுக் குள்ளான பௌத்த பிக்கு கண்டி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட பெண்ணை பொலிஸார் கடுமையாக எச்சரித்து விடுதலை செய்துள்ளனர்.

இந்தப் பெண்ணும் பௌத்த பிக்குவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7)

# அமைச்சரின் மறைவு குறித்து அனுதாபச் செய்திகள்

(கொழும்பு)

இருதய நோயினால் காலமான அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவின் மறைவு குறித்து அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், மற்றும் வெளிநாட்டுத் தலைவர்கள், அரசியல் வாதிகள் தமதுஅனுதாபச் செய்திகளைத் தெரிவித்துள்ளனர்.

மக்கள் ஐக்கிய முன்னணி தனது அனுதாபச் செய்தியில்'' இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அமைச்சர் பொறுப்புடன் செயற் பட்டவர்'' என்றும்,

★ பொதுஜன ஐக்கிய முன்னணியின் அனுதாபச் செய்தியில் ''அமைச்சரின் மறைவு நாட்டின் அபிவிருத்திக்குப் பேரடி'' என்றும்,

★ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ''அடக்கு முறைகளை எதிர்ப்பதில் பொறுப்புடன் திகழ்ந்தவர்'' என்றும் தமது அனுதாபச் செய்திகளில் தெரிவித்துள்ளன. (ந-4)

## நூலக சேவை ஆரம்பம்

(அரியாலை)

நல்லூரிலும், கல்வியங்காட்டிலும் அமைந்துள்ள சாயிபாபா கனஞ்சிய ஆத்மீக நூலகச்சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

காலை 10 மணிமுதல் 12 மணி வரை கோயில் வீதி நல்லூரிலும், மாலை 1.30 மணி முதல் 4மணி வரை விளையாட்டரங்க வீதி கல்வியங்காட்டிலும் இச் சேவை நடைபெறும். (ந-106)

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 137034 ஏ | 137034 பி |
| 137034 சி | 137034 டி |
| 137034 ஈ | 144410 ஏ |
| 144410 பி | 144410 சி |
| 144464 ஏ | 144464 பி |
| 147772 ஏ | 147772 பி |
| 152580 ஏ | 152580 பி |
| 152580 சி | 152695 ஏ |
| 152771 ஏ | 152787 ஏ |
| 152804 ஏ | 152811 ஏ |
| 152851 ஏ | 152851 பி |
| 152851 சி | 152852 ஏ |
| 152852 பி | 152852 சி |
| 152864 ஏ | 152864 பி |
| 152864 சி | 152864 டி |
| 152864 ஈ | 152879 ஏ |
| 152886 ஏ | 152886 பி |
| 152886 சி | 152936 ஏ |
| 152936 பி | 152949 ஏ |
| 152949 பி | 153002 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 144297 ஏ | 144297 பி |
| 144297 சி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 143127 ஏ | 143127 பி |
| 143127 சி | 143127 டி |
| 143127 ஈ | 143127 எவ் |
| 144293 ஏ | 144293 பி |
| 144293 சி | 144329 ஏ |
| 144329 பி | 144334 ஏ |
| 144334 பி | 144351 ஏ |
| 144351 பி | 144351 சி |
| 144351 டி | 144355 ஏ |
| 144355 பி | 144462 ஏ |
| 144462 பி | 144462 சி |
| 144462 டி | 144461 ஈ |
| 144507 ஏ | 144507 பி |
| 144507 சி | 144507 டி |
| 147802 ஏ | 148086 ஏ |
| 148086 பி | 148086 சி |

| | |
|---|---|
| 152988 சி | 153001 ஏ |
| 153001 பி | 153001 சி |
| 153001 டி | 153014 ஏ |
| 150428 ஏ | 150428 பி |
| 150428 சி | 153502 ஏ |
| 153502 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 142093 ஏ | 142093 பி |
| 142093 சி | 142093 டி |
| 142093 ஈ | 142093எவ் |
| 150384 ஏ | 150384 பி |
| 150384 சி | 150384 டி |
| 150384 ஈ | 150387 ஏ |
| 150442 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 153492 ஏ | 153492 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 141681 ஏ | 141682 ஏ |
| 143751 ஏ | 143869 ஏ |
| 143869 பி | 146414 ஏ |
| 150393 ஏ | 150393 பி |
| 153480 ஏ | |

(சு)

## ஆலய உற்சவம்

ஊர்காவற்றுறை புளியங்கூடலில் உள்ள சின்னமடு மாதா ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறும்.

இத்திருவிழாவின் இறுதி நிகழ்வான நற்கருணை நாள் ஆராதனை அடுத்த மாதம் 4ஆம் திகதி இரவு நடைபெறும்.

சென்ற வருடத்தினைப் போன்று இம்முறை போக்குவரத்து வசதிகள் செய்யப்படுமென சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த - 75)

### மட்டு. மாவட்டத்தில்
# மரணங்கள் வெகுவாக அதிகரிப்பு
# மருத்துவ வட்டாரங்கள் அதிர்ச்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் திடீர் மரணங்கள் வைத்தியத் துறையினரை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இம் மாவட்டத்தில் கடந்த 6 மாதங்களில் 283 திடீர் மரணங்கள் இடம் பெற்றிருப்பதாக திடீர் மரண விசாரணை அதிகாரி வட்டார அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இவ்வருடம் ஜனவரியில் இருந்து ஜூன் வரையிலான காலப்பகுதியிலேயே மேற்படி 283 திடீர் மரணங்களும் இடம்பெற்றுள்ளன.

62 பேர் கொலை செய்யப்பட்டும் 36 பேர் விபத்துக்களினாலும் 43 பேர் தற்கொலை புரிந்தும் ஏனையோர் துப்பாக்கிச்சூடு மற்றும் பாம்புக்கடிக்கு இலக்காகியும் திடீர் மரணம் அடைந்திருப்பதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் யுத்த சூழ்நிலை பொருளாதார அழுத்தங்கள், மனவிரக்தியே இத்தகைய மரண அதிகரிப்பிற்கு காரணங்கள் எனவும் கூறப்படுகிறது. (உ)

## தென்மராட்சிப் பகுதி போக்குவரத்து சீர்குலைவு; 30 ஆயிரம் ரூபா நட்டம்!

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதி பேருந்து சேவை பாதிக்கப்பட்டதால் தினமும் 30 ஆயிரம் ரூபா வருமான இழப்பை வடபிராந்திய போக்குவரத்துச் சபை சந்தித்து வருவதாக பொது முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

தினமும் தென்மராட்சிப் பகுதிக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும் 18 பேருந்துகளில் மூன்று பாடசாலைசேவைக்கு ஒதுக்கப்பட எஞ்சிய 15 வண்டிகளில் தினமும் 5300 பயணிகள் பயணம் செய்யும் இச்சாலையினால் தினமும் 30ஆயிரம் ரூபா வருமானம் பெறப்பட்டுவந்தது. (க-12)

## சுண்டிக்குளப் பகுதியில் விமானத்தாக்குதல் குடும்பஸ்தர் உடல்சிதறிப் பலியானார்

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் அளவில் இடம் பெற்ற விமானத் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் கட்டைக்காட்டைச் சொந்த இடமாகக் கொண்டவரான இறிஸ்ரோபர் [வயது 50] என்பவரே உடல்சிதறிப் பலியானவராவார்.

இதன் போது படுகாயமடைந்த யுவதி [55-வயது] வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில நாட்களிற்கு முன் இப்பகுதியில் இடம் பெற்ற விமானத்தாக்குதலில் 4 பொது மக்கள் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (சு)

## கண்ணாடிகள் நொருங்கிய நிலையில் 15 பஸ் வண்டிகள் சேவையில்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 15 பஸ் வண்டிகள் கண்ணாடிகள் நொருங்கிய நிலையில் சேவையில் ஈடுபடுவதால்பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; சேதமடைந்த பஸ் வண்டிகள் உட்பட சுமார் 48 பஸ் வண்டிகள் இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டன.

இவற்றுள் 37 பஸ்கள் யாழ்ப்பாணத்திற்கும் ஏனையவை வவுனியா, மன்னார் டிப்போக்களுக்கும் வழங்கப்பட்டன.

மேற்படி சபைக்குச் சொந்தமான இரு பஸ் வண்டிகள் மீது அண்மையில் கல்வீச்சு இடம்பெற்றமை தெரிந்ததே (க-த-12)

### யாழ். மாவட்டத்தில்

## பீடாதிபதி வேண்டுகோள்

அரசாங்கசேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவைக்குழு நடாத்தும் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் விரிவுரையாளர்களைக் கடமையாற்றுவதற்கு இலங்கை கல்வியாளர் சேவையில் ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 29, 30 ஆம்திகதிகளில் இராமநாதன்கல்லூரியில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப்பீடாதிபதி அலுவலகத்தில் நடைபெறும்.

கல்விச் சேவைக்குழுவிற்கு மேற்படி பதவிக்காக விண்ணப்பித்தவர்களுக்கு அழைப்புக்கடிதங்கள் ஏலவே அனுப்பப்பட்டுள்ளது.

கடிதம் கிடைக்காதவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதியை அலுவலகநேரத்தில் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நேர்முகப்பரீட்சைக்கு வருகைதரும்போது தவறாது தேவையான சகல ஆவணங்களுடனும் வருகைதரும்படி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி இ. கமலநாதன் அறிவிக்கின்றார். (க)

## நிவாரணம் பெறுவதில் சிரமம்

(துன்னாலை)

யுத்த சூழ்நிலை காரணமாக தென்மராட்சியில் இருந்து வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ளமக்கள் தமது நிவாரணங்களை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

பலநோக்குக் கூட்டுறவுச்

## கரவெட்டிப் பகுதியில் தனியார் வீடுகளில் கள் விற்பனை

[நெல்லியடி]

கரவெட்டி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கி வந்த கிளை ஒன்று தற்போது ஏற்பட்டுள்ள அசௌகரியமான சூழ்நிலையின் காரணமாக இயங்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

அப்பகுதி அங்கத்தவர்கள் தமது உற்பத்திப்பொருளான கள்ளை சந்தைப்படுத்துவதில் பெரும் சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் இச்சங்கத்தினை வேறு இடங்களில் அமைப்பதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும் அம்முயற்சி பயனளிக்கவில்லை.

இதனால் அங்கத்தவர்கள் தமது சொந்த வீடுகளில் வைத்தே கள்ளை விற்பனை செய்ய வேண்டி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதி மக்கள் பலத்த சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-18)

## இராணுவச்சிப்பாய் ஒருவர் நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பகுதியில் தவறுதலாகஇடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவச்சிப்பாய் ஒருவர்கடந்த 17ஆம் திகதி மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

இச்சந்தேகநபர் 10ஆயிரம் ரூபா சரீரப்பிணையில்செல்ல நீதவான் அனுமதியளித்துள்ளார்.

ஆகஸ்ட் 3ஆம் திகதி பிரஸ்தாப நபரை நீதிமன்றில் மீண்டும் ஆஜர் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்.

கடந்த 13ஆம் திகதி இடம் பெற்ற இத்தவறுதலான வெடிச்சம்பவத்தில் பாலசிங்கம் உதயராஜ் என்ற19வயது இளைஞன் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டார் என்பதும் ஏற்கனவே தெரிந்ததே. (க-21)

## பரீட்சை அனுமதி அட்டைகள்
## தாமதமாகக் கிடைத்தன பலர் வேலைவாய்ப்பு இழப்பு

(ஈச்சமோட்டை)

யாழ். வர்த்தகவங்கியினால் கோரப்பட்டிருந்த பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்த பலர், அதற்கான ஆட்சேர்ப்புப் பரீட்சை அனுமதி அட்டை தாமதமாகக் கிடைத்ததில் வேலை வாய்ப்புப் பெறும் சந்தர்ப்பத்தினை இழந்துள்ளனர்.

மேற்படி விண்ணப்பதாரிகளுக்கான எழுத்துப்பரீட்சை கொழும்பில் நடைபெற இருந்தபோதிலும், அதற்கான அனுமதிக் கடிதங்கள் பரீட்சை முடிந்த சில தினங்களின் பின்பே சம்பந்தப்பட்டவர்களது கைகளுக்கு கிடைத்துள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது நிலையை உணர்ந்து பரீட்சையில் பங்கு கொள்வதற்கான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வர்த்தக வங்கி வட்டாரங்களைக் கோரிய போதிலும் இதுவரையில் சாதகமானதொரு பதிலும் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்டோர் கவலை வெளியிட்டுள்ளனர். (உ-59)

## மாதகலில் லயன்ஸ் முகாம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம்மாதகல் அரசடி ப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் எதிர்வரும் சனிக்கிழமை இலவச மருத்துவ முகாம் ஒன்றினை மாதகல் விவசாய சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடத்தவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் இரத்த அழுத்தம், கண் பார்வை, புற்றுநோய், பற்சிகிச்சை, நீரிழிவு மற்றும் மலேரியா நோய்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். (க-77)

## வீதியோர மரங்களால்

சேதமடைந்த பஸ் வண்டி (க-த-12)

## யாழ். மாவட்டத்தில்

# எரிபொருள் விநியோகம் திருப்திஇல்லை தெருவோர விற்பனைநிலையங்கள் தோற்றம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணமாவட்டத்தில் எரிபொருள் விநியோகத்தில் இன்னமும் சீரற்ற நிலைமை நிலவிவருவதைத் தொடர்ந்து வலிகாமம், வடமராட்சி பிரதேசங்களில் அங்கீகாரம் பெறாதபல தெருவோர எரிபொருள் விற்பனைநிலையங்கள் தோற்றம்பெற்றுள்ளன.

இத்தகைய விற்பனை நிலையங்களில் பெற்றோல், மண்ணெண்ணெய், மற்றும் டீசல் போன்றவை தாராளமாக விற்பனைசெய்யப்பட்டு வருகின்றன.

அதேவேளை அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையங்கள் ''பெற்றோல் முடிந்துவிட்டது.'' 'மண்ணெண்ணெய் முடிந்துவிட்டது' போன்ற வாசகங்கள் கொண்ட அட்டைகளைத் தொங்கவிட்டுள்ளன.

மேலும், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களில் அட்டைக்குப் பெறப்படுகின்ற மண்ணெண்ணையை குடும்பத்தினர் குறைந்தவிலையில் தெருவோர எரிபொருள்விற்பனை நிலையங்களில் விற்பனை செய்துவருவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இதேசமயம், தெருவோர எரிபொருள்விற்பனை நிலையங்களில் விற்பனைசெய்யப்படும் பெற்றோல் கலப்படம் செய்யப்பட்டுள்ளதெனவும், அதன்காரணமாக பெறுமதிமிக்க வாகனங்கள் பழுதடைந்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. (க-77)

## அரசு ஐ.தே.க. பேச்சுவார்த்தை பிற்போடப்பட்டது

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே புதிய அரசியல்யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகள் பிற்போடப்பட்டுள்ளன.

தற்போது வெளிநாடு சென்றிருக்கும் ஜனாதிபதி நாடு திரும்பியதும் அடுத்த கூட்டத்தை நடாத்துவது பற்றி தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நிவாரணத்தை பெறுவதற்கு நீண்டவரிசைகளில் பொதுமக்கள் நேரத்துடன் காத்திருக்கின்றனர்.

அதுமாத்திரமன்றி தவணை முறையில் மண்ணெண்ணெய் பெறுவதனாலும், சீரற்ற பங்கீட்டு முறை நடைபெறுவதனாலும் மக்களிடையே அலைச்சலும், மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடும் நிலவி வருகிறது. (த-41)

## யூ.என்.எச்.சீ.ஆர்.குழு நெடுந்தீவு விஜயம்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய குழுவினர் நெடுந்தீவிற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

யூ.என் எச்.சீ.ஆர் அனுசரணையுடன் அப்பகுதியில்மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி முயற்சிகளை மேற்பார்வையிடுவதற்காகவுமே இக் குழுவினர் அங்கு பயணமாகினர்.

நெடுந்தீவு பதில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம்,நெடுந்தீவுபிரதேச சபைத் தலைவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம்ஆகியோரை சந்தித்து இக் குழுவினர் கலந்துரையாடினர்.

[த-82]

# வீதியோர மரங்களால் போக்குவரத்துப் பாதிப்பு

(அரியாலை)

உடுவில் பகுதியில் வீதியோரமாக நிற்கும் பனை, தென்னை மரங்களில் இருந்து விழும் பனம்பழம், தேங்காய் போன்றவற்றினால் அவ்வீதிப்போக்குவரத்துக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

பனம் பழத்தை நோக்கி கால்நடைகள் வருவதனால் போக்குவரத்துத் தடை ஏற்பட்டு விபத்துக்கள் பல ஏற்படவும் வாய்ப்புக்கள் உண்டு.

இடம் பெயர்ந்த மக்கள் அதிகம் இப்பகுதியில் வசிப்பதனால் இவ்வீதியில் எந்நேரமும் மக்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகின்றன.

இதன் காரணத்தால் உரியவர்கள் இது விடயத்தில் அதிக கவனம் செலுத்தி மக்களது போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் நடந்து கொள்ளவேண்டும் என பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (த-106)

## தபாலகம் இயங்குகிறது

(துன்னாலை)

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்த சாவகச்சேரி தபலாகம் வடமராட்சி கரவெட்டி தபாலகத்தில் தற்காலிகமாக இயங்குகின்றது.

சாவகச்சேரியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான தபால்விநியோகம், மற்றைய அலுவலகம்சார்ந்தநடவடிக்கைகளும் இங்கே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆயினும் சாவகச்சேரி மக்கள் தமது தபால்களை பெறுவதற்கு நீண்ட தூரங்களிலிருந்து அங்கு செல்ல வேண்டியுள்ளமையால் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (த-41)

## மீனவர்களிடையே தகராறு

யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து அராலியில் வசிக்கும் குருநகர் மீனவர்களிற்கும், தம்பாட்டி மீனவர்களில் ஒரு பகுதியினருக்குமிடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இத்தகராற்றினை தீர்த்து வைக்குமாறு அராலியைச் சேர்ந்த கடற்றொழிலாளர் கடற்தொழில் திணைக்களத்தில் முறையிட்டுள்ளனர்.

(த-109)

## சிவில் நிர்வாக காரியாலயம் இட மாற்றம்

(அரியாலை)

காங்கேசன்துறை வீதி, இணுவில் சிங்கா றெஜிமெனட் படைப்பிரிவு முகாமில் இது வரை காலமும் இயங்கி வந்த சிவில் நிர்வாகக் காரியாலயம் தற்போது தாவடி முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இம்முகாம் கிழமையில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பொது மக்களின் தேவைகளைப்பூர்த்தி செய்யும் வகையில் திறந்திருக்கும்.

யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து கொக்குவில், இணுவில், கோண்டாவில், மருதனார்மடம், உடுவில் பகுதிகளில் தற்காலிகமாக தங்கியுள்ள பொது மக்கள் தொடர்ந்தும் தங்கள் பதிவினை மேற்படி முகாமில் மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-106)

## நிர்வாகிகள் தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஒய்வூதியம் பெறுபவர்கள் சங்க' அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் யாழ். பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்றது.

ஒய்வூதியர்சங்கநிர்வாகிகள் தெரிவில்' தலைவராக என். போமன், செயலாளராக பி. பரம்சோதி, பொருளாளராக கே, தங்கராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்:

(உ)

# யாழ். மக்கள் தொடர்ந்து துன்பமுறும் சூழலே இன்றுவரை காணப்படுகிறது

## டக்ளஸ் தேவானந்தா எம். பி.

(யாழ்ப்பாணம்)

மரத்தால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதிப்பதைப் போன்று யாழ் மக்கள் மீண்டும் மீண்டும் துன்பப்படும் சூழல் இன்று ஏற்பட்டுள்ளது. மக்கள் தமது பிரச்சினைகளை முன்வைப்பதற்கு கருத்துச் சுதந்திரம் வேண்டும். இதற்குமக்களின் ஒத்துழைப்பு அவசியமானதாகும்.

மேற்கண்டவாறு யாழ்; மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

'வலம்புரி' செய்தியாளரிடம் அவர் வழங்கியவிஷேட பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது;

நாம்சரியானதிசைநோக்கிக் குரல் கொடுக்கவேண்டும் அதற்கூடாகத்தான் நாம் யுத்தத்தில் இருந்து விரைவில் மீள முடியும்.

மக்களின் இதுவரையான பிரச்சினைகள் குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஒன்று மக்களின் உடனடிநாளாந்தப்பிரச்சினைகளைத் தீர்ப்பது. இரண்டாவது நீண்டகாலப் பிரச்சினைக்கான தீர்வு.

உடனடிப் பிரச்சினைகளில் போக்குவரத்து தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்பது முக்கியமான ஒன்றாகும்.

நீண்ட காலப்பிரச்சினை காலப்போக்கில் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

மேலும் எரிபொருள் விநியோகம்சம்பந்தமான முறைப்பாடுகள் குறித்து ஆராய்ந்து தீர்வு காணப்படவுள்ளதாகவும், இதேவேளை வடமாகாண புனர்வாழ்வு அமைச்சில் இடம்பெற்ற (25/07) அரச அதிபர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதென அவர் மேலும் தெரிவித்தார்:

தாங்க முடியாத அழிவுகளை எமது மக்கள் எதிர் நோக்கியுள்ளனர். இந்த யுத்தம் தொடர்ந்து நீடித்தால் எமது இனமே அழியும் நிலை தான் இங்குண்டு. இதனால் மக்கள் அற்ற வெறும் மண் தான் மிஞ்சும்;

எனவே கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி முன்னேறுவதுதான் சாத்தியம் என எமது கட்சி கருதுவதாக டக்ளஸ் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; ரணில் - சந்திரிக்கா உடன்பாட்டுடன் முன்னேறுவது தான் தற்போதைய நிலையில் உசிதமாக உள்ளது;

கடந்தகாலத்தில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் பல கால ஓட்டத்தில் பயனற்றுப்போய்விட்டன. ஆனால் யுத்தம் தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில் அழிவுகள் தான் மிஞ்சும். இது கடந்தகால அனுபவம்: எனவே எமது மக்களின் மேம்பாட்டிற்காக சகல நடவடிக்கையும் எடுக்கப்படவேண்டும் என்றார்.

(க)

## திருநெல்வேலி, மானிப்பாய் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் குளறுபடிகள் நிலவுகின்றன

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி மற்றும் மானிப்பாய்ப் பகுதிகளில் உள்ள சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் சிலவற்றில் குளறுபடிகள் நடைபெற்று வருவதாகபொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

சில சங்கக் கிளைகளில் பொருட்களின் நிறை குறைந்து விற்கப்படுவதாகவும் இதை அண்மையில் செயலக விலைக் கட்டுப்பாட்டாளர்கள் கண்டு பிடித்து எச்சரிக்கை செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது: அத்துடன் சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து பொருட்கள்சில தனியாருக்கு இரகசியமாக விநியோகிக்கப் படுவதாகவும் பொது மக்கள் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிள்ளது:

(3)

## ஆங்கில ஆசிரியர் ஒன்றுகூடல்

(மந்திகை)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் அனைவரையும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் சமுகமளிக்குமாறு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் சங்கப்பிரதிநிதி எஸ். சிவநேசன் தெரிவித்துள்ளார்.

(4-23)

## கோண்டாவில்வாகீஸ்வரிச.ச.நிலையத்தில் விளையாட்டு மைதானம் இல்லை

### நல்.பிர.சபை.தலைவரிடம் கோரிக்கை

(தென்மராட்சி)

கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையத்திற்கு விளையாட்டு மைதானம்இல்லாமையினால்இக்கிராமத்தில் இருக்கும் இளைஞர்கள் தமது விளையாட்டு ஆற்றல்களை மேம்படுத்த முடியாமல் இருப்பதாகத் தெரியவருகின்றது.

இதனால் இப்பகுதியில் இருக்கும் வெற்றுக் காணியை விளையாட்டு மைதானமாகப் பாவிக்க அதனைக் கொள்வனவு செய்து தரும்படி நிலையத்தினர் நல்லூர் பிரதேச சபைத் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பகுதி இளைஞர்கள் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாகப் பயன்படுத்தி வந்த கரப்பந்தாட்டமைதானம் அப்பகுதி ஆலயம் ஒன்றுக்கு மடம் அமைக்க வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

(க-77)

## வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் நீரிழிவுவில்லைகளுக்குத்தட்டுப்பாடு இல்லை

[யாழ்ப்பாணம்

வல்வெட்டித்துறை வைத்திய சாலையில் நீரிழிவு வில்லைகளுக்கு தட்டுப்பாடு எதுவும் இல்லையென மாவட்ட வைத்திய அதிகாரி க, மயிலேறும் பெருமாள்தெரிவித்துள்ளார்.

மேற்படிவைத்திய சாலை அபிவிருத்திசபை இதுதொடர்பாக தேவையான நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

[க]

## செஞ்சிலுவைக் கப்பல் வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கான வெளியூர்த்தபால்கள் அடங்கிய147தபால்பொதிகள் நேற்றைய செஞ்சிலுவைக் கப்பலில் எடுத்து வரப்பட்டதாகவும், இங்கிருந்து வெளியூர்களுக்கான 47 தபால்பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் யாழ். தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை நேற்றைய செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் சேவையில் பன்னிரெண்டு நோயாளர்களும் எட்டு பராமரிப்பாளர்களும் வந்துள்ளதாகவும் இங்கிருந்து பதினேழு நோயாளர்களும் பதின்மூன்று பராமரிப்பாளர்களும் சென்றுள்ளதாகவும் அவ்வட்

## விண்ணப்பம் மீளாய்வு

(மந்திகை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து தங்கியுள்ளவர்களுக்கு, 2000ரூபா கொடுப்பனவுக்கான விண்ணப்பமீளாய்வுகள் நடைபெற்று வருவதாகபிரதேச செயலகஅதிகாரி ஒருவர்தெரிவித்துள்ளார்.

## அரசசெலவில் அடக்கம்

[இளவாலை]

நவாலிப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களில் சுட்டுக் கொல்லப்பட்ட இனந்தெரியாத ஆணின் சடலம், மல்லாகம் மாவட்ட நீதிபதியின் உத்தரவிற்கிணங்க அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது;

[உ-12]

# சங்கேமுழங்கு

## விஞ்ஞான விவசாய பாடநெறிக்கு பெயர் இடம்பெறாதது ஏன்?

கடந்த வருட இறுதியில் அரச வர்த்தமானி அறி

ஞானச்சுடர்

## ...பெயர் இடம்பெறாதது ஏன்?

கடந்த வருட இறுதியில் அரச வர்த்தமானி அறிவித்தல் படி அரச பாடசாலைகளில் வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கு தமிழ் மொழி மூல ஆசிரியர் தெரிவுக்கான விண்ணப்பம் கோரப்பட்டது.

இதில் விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக்கல்வி, உடற்கல்வி, விவசாயம், சித்திரம், சங்கீதம், நடனம் எனும் பிரிவுகள் உள்ளடங்கும்;

இதற்காக க. பொ. த. (உ/த) பெறுபேற்றுப் புள்ளி அடிப்படையில் தேர்வு இடம் பெறுமெனவும் அறிவிக்கப்பட்டது. அதன் படி முன்னர் வெளியிடப்பட்ட பெயர் விபரங்களில் ஆரம்ப ஆசிரியர்களுக்கானதும் யாழ். கல்வி வலயத்தில் விஞ்ஞான ஆசிரியர்களுக்கானதுமான பெயர்ப் பட்டியல் வெளியிடப்படவில்லை;

அதனால் ஆரம்ப ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கம் அமைத்து மறியல் போராட்டங்கள் நடத்தியதன் விளைவாக இம்முறை அவர்களின் பெயர் இடம்பெற்றுள்ளது;

ஆனால் இதில் யாழ். கல்வி வலயத்தில் விஞ்ஞான விவசாய பாடநெறிகளுக்கு எவரது பெயருமே இடம் பெறவில்லை வேறு பாடங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதியிருந்தும் நாம் விஞ்ஞான பாடத்திற்கு வர்த்தமானி அறிவித்தல் படி விண்ணப்பித்தோம்.

எம்மை தெரிவு செய்ய வில்லையாயின் ஏன் விஞ்ஞான பாடத்திற்காக விண்ணப்பம் கோரப்பட்டது? இது பற்றி ஏன் கல்விச் சமூகம் சிந்திக்கவில்லை? எம்போல் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சங்கம் அமைத்து போராட்டம் செய்தால் தான் இவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? தயவு செய்து உரியவர்கள் தெரியப்படுத்த வேண்டும்.

ஆ. ஜென்சன் றொனால்ட்
(பாதிக்கப்பட்ட மாணவர் சார்பில்)

...னேழு நோயாளர்களும் பதின்மூன்று பராமரிப்பாளர்களும் சென்றுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட தபால்கள் இன்று விநியோகம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க-3)

...ணப்ப மீளாய்வுகள் நடைபெற்று வருவதாகபிரதேச செயலகஅதிகாரி ஒருவர்தெரிவித்துள்ளார்.

கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வரும் இவ் விண்ணப்ப மீளாய்வுகள், பளை உதவிஅரசாங்கஅதிபர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து தங்கியுள்ளோர்களிடம் நடைபெற்றுவருகிறது. (4-23)

[உ-12]

## ஞானச்சுடர் வெளியீடு

(அரியாலை)

சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆடிமாத "ஞானச்சுடர்" நூல் வெளியீடு இடம் பெறவுள்ளது. (த-106)

சுன்னாகம் பகுதியில்

# பெருமளவு ஹைலண்ட் பைக்கற் தனியார் கடைகளுக்கு கைமாற்றம்

## கிளைமுகாமையாளர்களின் திருகுதாளம்

(அரியாலை)

பொது மக்களின் நிவாரண விநியோகத்திற்கென பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களை கிளை முகாமையாளர் சிலர் தனியாருக்கு விற்பனை செய்து பணம் ஈட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இந்த வகையில் சுன்னாகப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றில் அண்மையில் பெருந்தொகையான ஹைலண்ட் பைக்கற்றுக்கள் 66 ரூபா விலையில் கிளை முகாமையாளரால் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அந்நேரம் பொருட் கொள்வனவுக்கென கூட்டுறவுச் சங்கத்திற்குச் சென்ற பொதுமக்கள் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை நிவாரண விநியோகத்தின் போது ஹைலண்ட் மா பைக்கற் இல்லை எனக் கூறி பொது மக்கள் சிலரை திருப்பி அனுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது;

பாதிக்கப்பட்ட மக்களுக்கென வழங்கப்படும் நிவாரணப் பொருட்களை மக்கள் சேவையை நோக்கமாகக் கொண்ட நிறுவனங்களே இவ்வாறு கையாடுவது மிகவும் வேதனைக்குரியது எனவும், இது விடயத்தில் அதிகாரிகள் அதிக கவனம் எடுத்து இனிமேல் இவ்வாறான தவறுகள் நடக்காது தடுக்க வேண்டும் எனவும்பாதிக்கப்பட்டபொது மக்கள் மனக்குமுறலுடன் தெரிவித்துள்ளனர்.

(க-106)

## இன்று ஒரு தகவல்

### "பெற்றதாயும் மொழியும் பேணிப்போற்ற வேண்டியவை"

ஒருகிராமத்தில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் எந்நேரமும் ஏதாவது குறும்புகளைச் செய்துகொண்டேயிருப்பான். தந்தையற்ற அவனை அவனுடைய தாயார் மிகவும் செல்லமாக வளர்த்து வந்தாள். இவனது குறும்புத்தன்மை தாளமுடியாமல் ஒருநாள் தாய் அவனை வன்மையாக ஏசிவிட்டாள். செல்லம் தந்த தனது தாய் இப்படிப்பேசியது அவனால் தாங்கமுடியவில்லை.

கிராமத்தை விட்டே பட்டிணத்திற்குப் போய்விட்டான். இவன் அங்கும், இங்கும் என்று சுற்றியலைந்தான். ஆயினும் பட்டிணத்தில் எல்லோரும் கடவுளிற்கே முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தார்கள். எண்ணையும், எழுத்தையும் கண்ணெனப் போற்றினார்கள். இதனால் இவனும் கற்க விரும்பினான்.

இவன் வீட்டிலிருந்தே பணம் கொஞ்சம் எடுத்து வந்ததால் தனது கல்வியைத் தொடர்வதில் சிக்கல் ஏற்படவில்லை. நன்கு கற்றான். ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய இருமொழிகளிலும் மிகவும் தேர்ச்சி பெற்றான். இவன் ஓரளவு பட்டணத்தில் புகழும் பெற்றிருந்தான்.

கிராமத்தில் இவனது பிரிவுத்துயர் தாங்காமல் தாய் உயிர்துறந்திருந்தாள். இவன் ஒருநாள் ஒரு கணம் கூட தன்னுடைதாயை நினைத்துப்பார்த்ததேயில்லை.

தன்னுடைய கல்விப் புகழால் பெருமிதம் கொண்ட அவன் தன் கிராமத்தவர்களிடம் சென்று தனது கல்வித் திறமையைக் காட்ட நினைத்தான்.

அவன் அவ்வூருக்கு வந்தான். ஆளே மாறியிருந்தான். அவ்வூர் பெரியாரிடம் தான் இந்தக் கிராம மக்களிற்கு நிறைய அறிவுரைகூற வேண்டும் கல்வியைப்பற்றி. அதனால் அவர்களை அழைக்குமாறு வேண்டினான். அவனது நினைவு தன் கல்வித் திறமையை எல்லோருக்கும் காட்ட வேண்டும் என்பது. ஆனால் பெரியவர் இவனிடம் ஏதாவது அறிவு விடயம் மக்களிற்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அனைத்து மக்களையும் ஒரு மரத்தடியில் கூட்டினார்.

நீளமான ஆடை அலங்காரத்துடன் மரத்தடியில் மக்கள் முன்தோன்றினான்.

மக்களைப்பார்த்து தனது சொற்பொழிவினை சமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் மாறி மாறி உரத்தகுரலில்கூறினான். அங்கிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. இதனால் அங்கிருந்தமக்கள் உரத்தகுரலில் தங்களுக்கு எதுவுமே விளங்கவில்லை எனக் கூச்சலிட்டனர். தம் தாய்மொழியில் சொற்பொழிவாற்றுமாறு வேண்டினர்.

அவனோ எனக்கு தமிழ் மறந்து பலகாலம் எனக்கூறி இடை இடை தமிழில் தட்டுத் தடுமாறி சமஸ்கிருதத்தில் தெளிவாகப்பேசினான்.

அதேவேளை சற்று தூரத்தில்நின்ற முட்டுக்கடாவின் பார்வையில் இப்பண்டிதனும், அவனுடைய சிவப்பு ஆடையும் பட்டுவிட்டது. அவ்வளவுதான் பண்டிதனை பார்த்து வேகமாக ஓடிவந்தது. தன்னை நோக்கிவந்த கடா தன்னை வணங்கி ஆசிகள்பெற விரும்புவதாய் நினைத்து 'ஆயுஷ்மான்' என ஆசீர்வதித்தபோது அது அவரை அட்சியம்செய்யாது பாய்ந்து முட்டியது.

உடனே கீழேவிழுந்த பண்டிதர் கடாவைக் கண்டபடி தமிழில் வேகவேகமாய் உரத்தகுரலில் திட்டினார்.

இதனைப்பார்த்த சனக்கூட்டம் அவரை நோக்கி ஐய்யா கடா உங்களை மூட்டியதால்தான் நீங்கள் தாய் மொழியில் பேசினீர்கள். எவ்வளவுகல்வியறிவு எம்மிடம் இருந்தாலும் நாம் தாயையும், தாய்மொழியும் மறக்கக்கூடாது. நாம் பிறக்கின்றபோதே தாய்க்கும் தாய் மொழிக்கும் உரிமை உடையவர்கள.

எத்தனைதான் அன்னிய மோகம் வந்தாலும் நாம் இவை இரண்டினையும்மறக்க கூடாது. தாய் தன்னுடைய தலாட்டிலும், சீராட்டிலும் எமக்கு தாய்மொழியைக் கற்றுத் தருகிறாள்.

தாயை சேய் பேணல் தலையறம். நமக்கெல்லாம் தாய் தமிழேயாதலால் அதனை என்னாளும் எதுகற்றபோதும் மறவா வாழவேண்டும். தாயையும், மொழியையும் போற்றுபவர்களால்தான்

# மாவின் விலை குறைப்பை அடுத்து பாணின் நிறையும் குறைகிறதாம்

## யாழ். மாவட்ட நுகர்வோர் சங்கம் புகார்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவின் விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து பாணின் விலையும் குறைக்கப்பட்டது. 850 கிராம் நிறையுள்ள பாணை 7 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்படவேண்டும் என யாழ். அரச அதிபரால் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளிடம் அவசர வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஆயினும் தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெறுவதோ குறித்த தீர்மானத்துக்கு நேர் எதிராகவே இருப்பதாகப் பொது மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இங்கு விற்பனை செய்யப்படும் பாணின் உண்மையான நிறை 320 கிராம் மட்டுமே என யாழ். மாவட்ட நுகர்வோர் சங்கப் பிரதிநிதிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

இராசநாயகம் தலைமையில் நெல்லியடி வணிகர் சங்க மண்டபத்தில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மேலும் தீர்மானிக்கப்பட்ட விடயங்களாவன:-

★ தென்மராட்சியில் இடம்பெற்று வருகின்ற யுத்த நடவடிக்கைகளால் அனைத்து வர்த்தகர்களின் தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக தற்போது வருமானம் எதுவும் இல்லாத நிலையில் இருக்கும் வணிகர்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் இவர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

★ கைவிடப்பட்ட நிலையில் அங்குள்ள பொருட்களையும், முக்கிய ஆவணங்களையும் அங்கு சென்று மீட்டுவருவதற்கு யாழ். அரச அதிபரும், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளைக் கோருவதெனவும்.

★ தென்மராட்சி மக்களுக்க விசேடமாக வணிகர்களுக்கு ஏற்பட்ட அவல நிலைகள் பற்றி விரிவான அறிக்கையொன்றினை ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

★ சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் சங்கப் பிரதிநிதிகள் மேற்படி விடயங்கள் தொடர்பாக அரசாங்க அதிபரை நேரில் சந்தித்து தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

(க-77)

## தமிழ்க்கட்சிகளுக்கு வழங்கிய பணத்தை மீளப்பெற அரசு தயக்கம்

### சிங்கள உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்க்கட்சிகளுக்கு, மக்கள் வங்கிமூலம் பெற்றுக் கொடுத்த கோடிக்கணக்கான பணத்தை மீளப்பெறும் முயற்சியில் அரசு பின்னடிப்பதாக சிங்கள உறுமயக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

தொழில் ரீதியாகவும், சொந்தத்தேவைகளுக்காகவும் மக்கள்வங்கிமூலம் சிறு சிறு கடன்பெறும் மக்களிடம் இருந்து பணத்தை அறவிடுவதில் வங்கிநிர்வாகம் கடும் போக்குடன் செயற்பட்டு வருகிறது.

ஆனால், மக்கள்வங்கி கொள்ளுப்பிட்டிக் கிளை மூலம் இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸ் 9.5 கோடிரூபாவையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 3.5 கோடி ரூபாவையும் கடனாகப்பெற்றுள்ளது.

இவை, அரச சிபார்சின் பேரில் வழங்கப்பட்டுள்ள போதிலும் அக்கடன்களை மீளப்பெறுவதில் அரசு அக்கறைகாட்டவில்லை எனவும் உறுமயக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

(உ)

## நோயாளர் பராமரிப்பாளர்கள் வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையில் இருந்து நோயாளர் பராமரிப்பாளர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

இவர்களின் செயற்பாடுகள் ஆஸ்பத்திரியின் சில விதிமுறைகளை மீறியதனாலும் ஒழுக்கமீறல்கள் நிகழ்ந்ததினாலுமே இவர்கள் வெளியேற்றப்படவேண்டிய சூழ்நிலைஏற்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது நோயாளரை பராமரிப்பதற்கு வைத்திய

இச்சேவையில் ஈடுபட விரும்புபவர் மேற்படி நலன்புரிச் சங்கத்திற்கு தம்மைத் தெரியப்படுத்தினால் அவர்களின் நன்னடத்தையைப் பொறுத்து நோயாளரைப் பராமரிக்க நியமிக்கப்படுவர் என யாழ். போதனாவைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். (க-12).

## வருடாந்த இறைநிகழ்வு

(ஈச்சமோட்டை)

பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த இறைநிகழ்வுகள் வரும் சனிக்கிழமை நற்கருணை வழிபாட்டுடன் ஆரம்பமாகும்.

அதைத்தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை திருப்பலிப் பூசையும் திருச்சொரூப உலாவும் இடம்பெறும் (உ-59)

## க. பொ. த (உயர்தரம்)

### பரீட்சை வினாத்தாள்கள்

தன்னுடைய கல்விப் புக ழால் பெருமிதம் கொண்ட அவன் தன் கிராமத்தவர்களிடம் சென்று தனது கல்வித் திறமையைக் காட்ட நினைத்தான்.

அவன் அவ்வூருக்கு வந்தான். ஆளே மாறியிருந்தான். அவ்வூர் பெரியாரிடம் தான் இந்தக் கிராம மக்களிற்கு நிறைய அறிவுரைகூற வேண்டும் கல்வியைப்பற்றி. அதனால் அவர்களை அழைக்குமாறு வேண்டினான். அவனது நினைவு தன் கல்வித் திறமையை எல்லோருக்கும் காட்ட வேண்டும் என்பது. ஆனால் பெரியவர் இவனிடம் ஏதாவது அறிவு விடயம் மக்களிற்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அனைத்து மக்களையும் ஒரு மரத்தடியில் கூட்டினார்.

இவன் கல்விகற்ற பெரும் பண்டிதன் போலல்லாது கல்யாண மாப்பிள்ளை போன்று சிகப்பு நிறப் பட்டாலான ...யிலுள்ள தாய் மொழியில் பேசினீர்கள். எவ்வளவு கல்வியறிவு எம்மிடம் இருந்தாலும் நாம் தாயையும், தாய்மொழியும் மறக்கக் கூடாது. நாம் பிறக்கின்றபோதே தாய்க்கும் தாய் மொழிக்கும் உரிமை உடையவர்கள்.

எத்தனைதான் அன்னிய மோகம் வந்தாலும் நாம் இவை இரண்டினையும் மறக்க கூடாது. தாய் தன்னுடைய தலாட்டிலும், சீராட்டிலும் எமக்கு தாய்மொழியைக் கற்றுத் தருகிறாள்.

தாயை பேணல் தலையறம். நமக்கெல்லாம் தாய் தமிழேயாதலால் அதனை என்னாளும் எதுகற்ற போதும் மறவா வாழவேண்டும். தாயையும், மொழியையும் போற்றுபவர்களால்தான் இம்மையிலும் வறுமையிலும் இன்பமாக வாழமுடியும்.

(த)

தென்கச்சி சுவாமிநாதன்

## மாணவர் நலன்கருதி,
# கிழக்குப் பல்கலை வேலை நிறுத்தப் போராட்டம் ஒத்திவைக்க முடிவு

(மட்டக்களப்பு)

கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வரும் கிழக்குப்பல்கலைக்கழக விரிவுரையாளர் மற்றும் ஊழியர்களது வேலை நிறுத்தப் போராட்டம், மாணவர் நலன் கருதி தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிழக்குபல்கலைக்கழக தொழிற்சங்க வட்டாரங்களுக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்குமிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து செவ்வாய்க் கிழமை 2.30 மணியில் இருந்து வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆகஸ்ட் மாதத்திற்கு முன்பு, பல்கலைக்கழக விரிவுரையாளர் ரி. ஜெயசிங்கம் மீதான ஒழுக்காற்று நடவடிக்கையை வாபஸ்பெறப்பட வேண்டும் எனவும்,

பேராசிரியர் மீது பல்கலைக் கழகம் மேற்கொண்ட ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்த்து வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியோர் மீது பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது எனவும் பல்கலைக் கழக நிர்வாகத்தினருக்கு தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதையடுத்து வழமை போல் விரிவுரைகள் நடைபெறவுள்ளதால் மாணவர்களை விரிவுரைகளுக்கு வருகை தருமாறு பல்கலைக் கழக துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

(உ)

# நோயாளர் பராமரிப்பாளர்கள் வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்திய சாலையில் இருந்து நோயாளர் பராமரிப்பாளர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

இவர்களின் செயற்பாடுகள் ஆஸ்பத்திரியின் சில விதிமுறைகளை மீறியதனாலும் ஒழுக்கமீறல்கள் நிகழ்ந்ததினாலுமே இவர்கள் வெளியேற்றப்படவேண்டிய சூழ்நிலைஏற்பட்டதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது நோயாளரை பராமரிப்பதற்கு வைத்திய சாலை நலன்புரிச் சங்கம் ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

இச்சேவையில் ஈடுபட விரும்புபவர் மேற்படி நலன் புரிச் சங்கத்திற்கு தம்மைத் தெரியப்படுத்தினால் அவர்களின் நன்னடத்தையைப் பொறுத்து நோயாளரைப் பராமரிக்க நியமிக்கப்படுவர் என யாழ். போதனாவைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். (க-12)

## 2ம்தவணை விடுமுறை

[மந்துவில்]

பலாலி ஆசிரியர் கலாசாலை, இரண்டாம் தவணை விடுமுறைக்காக ஆகஸ்ட் 4 ஆம் திகதி மூடப்பட்டு மீண்டும் ஆகஸ்ட் 30ஆம்திகதி மூன்றாம் தவணை ஆரம்பமாகும். (உ-39)

## வருடாந்த இறைநிகழ்வு

(ஈச்சமோட்டை)

பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த இறைநிகழ்வுகள் வரும் சனிக்கிழமை நற்கருணை வழிபாட்டுடன் ஆரம்பமாகும்.

அதைத்தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை திருப்பலிப் பூசையும் திருச்சொரூப உலாவும் இடம்பெறும் (உ-59)

## க. பொ. த (உயர்தரம்)
# பரீட்சை வினாத்தாள்கள் இன்று யாழ். எடுத்துவரப்படும்?

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் முப்பத்தியோராம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கான வினாத்தாள்களும், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய வினாத்தாள்களும் இன்று யாழ்ப்பாணம்எடுத்து வரப்படவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளைஇடம்பெயர்ந்துள்ள சில தனிப்பட்ட பரீட்சாத்திகளின் பரீட்சை மண்டபமாற்றம் சம்பந்தமான ஒழுங்குகள் பற்றிய உறுதியான விபரம் இன்று வெளிவரலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-3)

# சாதனைகள் பலவிதம் அவை ஒவ்வொன்றும் ஒருவிதம்
## சுன்னாகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சாதனைகள் பலவிதம் அவை ஒவ்வொன்றும் ஒருவிதம் என்பது போல ஒரே தடவையில் ஆறு குட்டிகளை ஈன்று சாதனை படைத்ததாம் ஒரு ஆடு.

இச் சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது; சுன்னாகம் பகுதி விவசாயி ஒருவரின் ஆடு அண்மையில் ஆறு குட்டிகளை ஈன்றுள்ளதாம்.

ஆறு குட்டிகளும் தாய் ஆடும் நலமாக இருப்பதாக இன்றுவரை கிடைத்த தகவல்கள் தெரிவித்துள்ளன.

குறிக்கப்பட்ட ஆட்டுக் குட்டி கடந்தவருடமும் 05 குட்டிகளை ஈன்றுள்ளதாகவும் அவை இறந்துவிட்டதாகவும் அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஆறு குட்டிகளையும் நேரில் பார்வையிடுவதற்குப் பெருந்தொகையானோர் அப்பகுதிக்கு விரைந்து கொண்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஒருபிடி கீரை ஒரு ரூபா

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் - மருதனார்மடம் சந்தையில் ஒரு பிடி கீரையின் விலை ஒரு ரூபாவாக விற்கப்படுகிறது.

கடந்த வாரம் அளவில் கீரைப்பிடி 5 ரூபாவாக விற்கப்பட்டதும் தெரிந்ததே.

[க]

## பெற்றுக் கொள்ளவும்

(மந்திகை)

மன்னவிண்டான் சோரன்பற்று பளையைச் சேர்ந்த பொன்னையா முருகுப்பிள்ளை என்பவரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு "வலம்புரி" அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

(4-28)

## மதகுரு சுட்டுக் கொலை

(திரிபுரா)

இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் கத்தோலிக்கமதகுரு ஒருவர் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மூவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மதகுருவான விக்ரர்காஸ்தார் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். அவரது உதவியாளரான அருட்தந்தை போல் ஆல்படாமெண்டிஸ், வாகன ஓட்டுநர் உட்பட மூவர் காயம் அடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

## இலங்கைத்தமிழர் கல்கத்தாவில் கைது

(கல்கத்தா)

கல்கத்தா விமான நிலையத்தில் இலங்கைத் தமிழர் ஒருவர் சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தாய்லாந்து நாட்டில் இருந்து வந்து கல்கத்தா விமான நிலையத்தில் இறங்கியபோதே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (7)

# பிரான்ஸ் தலைநகரில் கொடூர விமான விபத்து

# நூற்றுக்கும் மேற்பட்டோர் பலி; சடலங்கள் மீட்பு

(பாரிஸ்)

**பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கொடூர விமான விபத்தில் 113 பேர் துடிதுடித்துப் பலியாகினர்.**

**அப் பகுதி முழுவதும் ஒரே புகைமண்டலமாக காணப்படுவதாகவும் சடலங்களை மீட்கும் பணிகள் மிகவும் சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ளப்படுவதாகவும் பாரிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.**

பிரான்ஸ் தலைநகர் பாரிஸிற்கருகே கொன்கோட் அதிவேக பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 113 பேர் பலியாகினர்.

உணவு விடுதிக்கருகில் விமான விபத்து இடம் பெற்றதனால் அதில் இருந்த மேலும் 4 பணியாளர் பலியாகியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

பாரிஸில் இருந்து நியூயோர்க் நோக்கிச் சென்று கொண்டிருந்த மேற்படி கொன்கோட் விமானம் புறப்பட்ட சில நிமிட நேரத்திலேயே இயந்திரம் தீப்பற்றிக் கொண்டதில் விபத்துக்குள்ளானது.

அதில் பயணம் செய்த 100 பயணிகள் மற்றும் 9 விமானப் பணியாளர் வேறு நால்வர் பலியானதாக கூறப்படுகின்றபோதிலும் இந்தத் தொகை மேலும் அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது.

மரணமானவர்களில் அனேகர் ஜேர்மனியைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் என்பது தெரியவந்துள்ளதுடன் பலர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விமானம் வீழ்ந்து நொருங்கிய மூன்று மணி நேரத்தின் பின்பே தீயணைப்புப் பிரிவினர் தமது கடமைகளை தொடங்கியதாகவும் இதனாலேயே மீட்புப்பணிகள் தாமதம் பெற்று உயிரிழப்புகள் அதிகரித்திருப்பதாகவும் சில குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதேவேளை 1969ம் வருடம் பிரான்ஸில் உருவாக்கப்பட்ட அதிவேக பயணிகள் கொன்கோட் ரக விமானம் விபத்துக்குள்ளானது இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## உலக தரிசனம்

## இந்தோனேசிய அதிபர்மீது நடவடிக்கை எடுப்பது குறித்து பாராளுமன்றம் ஆராய்வு

(ஜகார்த்தா)

இந்தோனேசியப் பாராளுமன்றம் அதிபர் அப்துல் ரகுமான் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து தீவிரமாக ஆராய்து வருகிறது.

இருமந்திரிகளை அமைச்சரவையிலிருந்து பதவிநீக்கியதால் அரசுக்குள் உட்பூசல் ஏற்பட்டிருப்பதாகவும் இருமாதங்களாயும் காரணம் காட்டத் தவறி வருவதாகவும் இதனால் ஒருபகுதிமக்களிடையே எதிர்ப்புகள் உருவாகிவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவிடயம் தொடர்பாக பாராளுமன்றில் ஆராய்வது குறித்து எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் அறியப்படுகிறது. (து)

# பொலிஸார் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது சட்டவிரோதமானது

## பீஹார் அரசு அறிவிப்பு

[பட்னா]

பிஹாரில் வேலை நிறுத்தம் செய்யும் பொலிஸ் அதிகாரிகள் மீது தண்டனை மேற்கொண்டு வேலை நிறுத்தத்தை சட்ட விரோதம் என அறிவிக்கப் போவதாக பீஹார் அரசு தெரிவித்துள்ளது.

வேலை செய்யாவிடில் சம்பளம் இல்லை என்ற கொள்கையைப் பின்பற்றுவதென்றும் அரசுதீர்மானித்திருப்பதாக பொலிஸ் பணிப்பாளர் தலமை அதிபர் கே. யக்கர் பட்னாவில் கூறினார்.

எந்த விதமான நிலைகளையும் சமாளிக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பிஹார் இராணுவப் பொலிஸ் ஊர்காவல் படைவனத்துறை அதிகாரிகள் காவல் நிலையங்களை நிர்வகிக்க சிறப்பு பொலீஸ் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள், வேலை நிறுத்தத்தில் 18 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக 13 அம்சக் கோரிக்கையை வைத்தே இவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தார்கள் என்றும் இதனால் பொலிஸ் நிலையங்களில் வேலைகள் முடங்கியிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. [து]

## காஷ்மீரில், தீவிரவாதிகள் கடத்திய ஜேர்மன் சுற்றுலாப்பயணி சுட்டுக்கொலை

(புதுடில்லி)

காஷ்மீரில் முஸ்லிம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.!

இவரது சடலத்தினை, காஷ்மீரில் பனிப்படலம் மீது வீசப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் கண்டெடுத்திருப்பதாக தெரியவருகிறது.

கடந்த 18 ஆம்திகதி, லடார் பகுதியில் வைத்து 48 வயதான மேற்படி ஜேர்மனிய நாட்டு சுற்றுலாப்பயணியை முஸ்லிம் தீவிரவாதக் குழுவினர் கடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## ஈழத்தமிழர் உரிமைபெற மத்திய அரசுஉதவ வேண்டும்

### -புதியதமிழகம் கட்சித்தலைவர்-

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினையில், சிங்கள மக்களைப் போன்று தமிழ் மக்களுக்கும் முழுஉரிமையினை வழங்க மத்திய அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று புதிய தமிழகம்கட்சித் தலைவர் டாக்டர் கே.கிருஸ்ணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர் மாநாட்டில் பேசிய இவர் இலங்கை முழவதிலும் தமிழ்மக்கள் பல்வேறு துன்பதுயரங்களை அனுபவிக்கின்றார்கள் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

## மத்தியகிழக்கு அமைதிப்பேச்சுக்களில் முன்னேற்றமில்லை இஸ்ரேல் பலஸ்தீன தலைவர்கள் விரைவில் நாடு திரும்புவர்

(வோஷிங்டன்)

அமெரிக்க காம்டேவிட் நகரில் நடைபெற்று வரும் மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுக்கள் முடிவேதும் எட்டாதநிலையில் முறிவடையும் நிலையை அடைந்திருப்பதாக தெரியவருகிறது.

மத்திய கிழக்கில் நீண்டகாலமாக நிலவிவரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இஸ்ரேலியப் பிரதமர் எஹிட்பராக் பலஸ்தீனத் தலைவர் யசிர் அரபாத் ஆகியோர் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் தலைமையில் கடந்த இரு கிழமைகளுக்கும் மேலாக பேச்சுக்கள் நடாத்தியபோது, எந்தவொருமுடிவுகளும் எட்டுவதற்கான உடன்பாட்டிற்கு சம்பந்தப்பட்ட தலைவர்கள் முன் வராததையடுத்து முறிவடையும் நிலையை அடைந்துள்ளது.

இதனையடுத்து இஸ்ரேல் பலஸ்தீனத் தலைவர்கள் தத்தமது நாடுகளுக்குத் திரும்பும் நிலையில் இருப்பதாகவும் தமது போக்குவரத்து சாதனங்களை தயார் நிலையில் வைக்கும்படி கட்டளை பிறப்பித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## ஸ்பெயினில் கார் குண்டு வெடிப்பு நால்வர் படுகாயம் அடைந்தனர்

(மட்றிட்)

ஸ்பெயினில் இடம்பெற்றகார்குண்டு வெடிப்பில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

ஏ.ரி.ஏ. என்ற பிரிவினைவாதத் தீவிரக் குழு ஒன்றினால் கார் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டே வெடித்தது என்றும் புலனாய்வுத் துறையினர் ஊர்ஜிதம் செய்வதாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் குண்டு வெடிப்பிலிருந்து பிராந்திய சபைத் தலைவர் மயிரிழையில் தப்பினார் என்றும் இக்குண்டு வெடிப்புடன் ஸ்பெயினில் 7 குண்டுகள் ஒரு மாதத்தில் வெடித்துள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

## இந்திய பிரதமர் அமெரிக்கா செல்வார்

(புதுடில்லி)

பிரதம மந்திரி அடல் பிஹாரிவாஜ்பாய் செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி 3 நாள் அரச முறைப் பயணமாக அமெரிக்கா செல்ல இருக்கிறார்.

அவர் நியூயோர்க் சான் பிரான்சிக்கோ நகரிலிருந்து செல்வார். இதற்கான தேதிகளும் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வாண்டு மார்ச் மாதம் இந்தியாவிற்கு வருகைதந்த அமெரிகக அதிபரின் அழைப்பிற்கிணங்க வாஜ்பாய் இந்தப்பயணத்தை மேற்கொள்வதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (து)

# மகாராஷ்டிர சட்டசபையில் கூச்சல் சபை நடவடிக்கை ஒத்திவைப்பு

(புதுடில்லி)

மகாராஷ்டிர மாநில சட்டசபையில் நேற்று அங்கத்தவர் மத்தியில் பலத்த கூச்சலும் குழப்பமும் நிலவின.

சிவசேனைத் தலைவர் பாலதாக்கரே கைது செய்யப்பட்டமை சம்பந்தமாகவே இக்கூச்சல் குழப்பங்கள் ஏற்பட்டன.

ஒலிவாங்கிகள் உடைக்கப்பட்டதுடன் நாற்காலிகள் பலதும் தூக்கி வீசப்பட்டன. வார்த்தைப் பிரயோகங்கள் தாராளமாக உறுப்பினர்கள் மத்தியில் பரிமாறப்பட்டன.

சபாநாயகர் உடனே சபையை ஒத்திவைத்தார்.

இச்சம்பவத்தை அடுத்த உறுப்பினர்கள் பலர் காலவரையறையின்றி இடைநிறுத்தப்பட்டதாக மகாராஷ்டிர தகவகள் தெரிவித்துள்ளன.

பால்தாக்கரே மும்பாயில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதையடுத்து அப்பகுதியில் பதற்றம் நிலவியதும் ஏற்கனவே தெரிந்ததே. (க-து)

## நடிகர் அமிர்தாப் பச்சனின் சொத்துக்கள் முடக்கம்

மும்பை திரையுலகில் பிரபல நடிகரான அமிர்தாப் பச்சனின் வங்கிக் கணக்குகள் மற்றும் வீடுகள் வருமான வரித் தொகை மதிப்பீட்டாளர்களால் முடக்கப்பட்டு விட்டது.

அவர்களிடமிருந்து வரவேண்டியிருந்த 13 கோடி ரூபா வருமான வரியை வசூலிக்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இந்திய நிதித்துறை இணை அமைச்சர் தனெஞ்சேகுமார் தெரிவித்தார்.

அமிர்தாப்பச்சனுடன் தொடர்புடைய வர்த்தகமற்றும் தொழில் நிறுவனங்கள் சோதிக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. (து)

## கோரிக்கை

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே ஒத்துழைப்புக்கான முழு வாய்ப்புகளைக்கண்டறிவதில் அமெரிக்கா விதித்துள்ள தடைகள் இடையூறாக இருக்கின்றன என பிரதம மந்திரியின் முதல் அமைச்சுசெயலரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான பிரதேஷ் மிஸ்ரா கூறியிருக்கிறார்.

இந்தப் பேச்சு வாத்தையின் போது பாகிஸ்தான் பற்றியேச்செழுந்த தென்று பயங்கர வாதத்தை விடும் வரை அதனுடன் பேச முடியாதென்றும் குறிப்பிட்டதாகப் பத்திரிகையாளரிடம் கூறினார். [து]

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்.
குறள்

வலம்புரி

## இன்னும் துலங்கும்...

போராட்ட வரலாறுகள் துன்பம் நிறைந்தவையாகவும் காலம் கடந்து உண்மை துலங்குபவையாகவும் விளங்குவது இயல்பு. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்கும் போதும் அப்பொருளின் மெய்ம்மையை உணருவது அறிவுக்கு அழகு.

தெய்வீக இராமனை நல்லதோர் பகை என்றான் இராவணன். பகைப்புலத்திலிருந்து பாராட்டு வரும் போது அது மேலானது என்று எண்ண வேண்டும் தான். பாராட்டு ஒரு புறம் இருக்க உண்மை புலப்படுகிறது, துலங்குகிறது என்றால் மகிழ்ச்சி தான்.

அமைச்சரொருவர் ஆளும் தகைமை பிரபாகரனுக்கே உண்டு என்கிறார். இன்னொரு பெரும் பான்மைச் சமூகத்தவர் புலிகள் தலைவர் பிரபாகரன் வர்க்கப் போராட்ட வீரன் என்கிறார். உண்மையில் அவரொரு பயங்கர வாதியல்ல. அவரின் வீரத்தை சிங்கள மக்களும் மதிக்கின்றனர் என்கிறார் வைத்திய கலாநிதி பெர்னாண்டோ.

இன்றைக்கு தமிழர்களின் இன்னல்களையும், மறுக்கப்பட்ட உரிமைகளையும் கொடுக்க வேண்டும் என உணர்வு நிலையில் ஆளும் கட்சியும், ஜனாதிபதியும் இருக்கின்றனர். இவை உள்ளத்தைத் தொடும்வரையில் உருவாக்கம் பெற்றால் காலத்துக்குக் காலம் எழுகின்ற பாராட்டுக்களும், கருத்துக்களும் துணைநின்றனவென்றே எண்ணத் தோன்றும்.

ஆரம்பத்திலே தோன்றிய முரண் பாடுகளை முற்ற விட்ட காரணத்தால் முகம்

# பக்குவமும்; பணிவும் நிறைந்த உளவளர்ச்சியே மனித வாழ்வை மேன்மைப்படுத்துகிறது

மனிதனாகப் பிறந்தயாருக்கும் மனநிலை எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சில நாட்களில் நித்திரை விட்டுக்காலையில்எழும் பொழுதே சோம்பலுடனும், சலிப்புடனும் தான் அறியாமலே மன உற்சாகமின்றிஎழுந்திருப்போம்.

ஆனால் மற்றும் சில நாட்களில் எழும் போதே தன்னையறியாத ஒரு தெம்புடனும், உற்சாகக்களிப்புடனும் எழுந்திருப்போம். இந்தமாறுபட்ட நிலைக்குக்காரணம் யாதென நோக்கினால் நம் மனமே எல்லாவற்றிற்கும் பொறுப்பு என்பதை உணரலாம்.

நல்ல அனுபவமும், பக்குவமும், பண்பும் நிறைந்த சிந்தனா சக்திகொண்டவர்கட்கு மனநிலை எப்பொழுதும் ஒரே மாதிரியாகவே இருக்கும். துன்பங்களைக்கண்டுதுவண்டு விடாமலும், இன்பங்களைக் கண்டு துள்ளிக்குதிக்காமலும் நிதான சிந்தனையுடன் தன் மனத்தினை வழிப் படுத்திக் கொள்ளும் ஆற்றல், பக்குவப்பட்ட மனநிலை காணப்படும்.

பெரும்பாலான மக்கள் தம் மனநிலையை வைத்தே உலகையும் எடை போட முயல்கின்றார்கள்: எல்லாரிடமும், எல்லா இடத்திலும் இது சரியாக அமைவதில்லை. இதனால் தமக்குத்தாமே குழப்பத்தையும், துன்பத்தையும் ஏற்படுத்திக்கொள்கின்றார்கள். விதிவிலக்காகசிலசந்தர்ப்பங்களில் இது அற்பசந்தோசத்தையும் அமைதியையும் கொடுத்தாலும் நிரந்தரமான பலனைக் கொடுப்பதில்லை இவை யாவற்றிற்கும் தன் மனமே காரணம்.

நல்லனவும், தீயனவும் நம்மைத்தேடிவருவதில்லைநாமே தேடிக்காண்கின்றோம். நூலைப் போலசேலை எனவும், மனம் போலவாழ்வுஎனவும் விதைத்ததே அறுவடை எனவும், வினையின்பயனே விளைவு எனவும், கூறப்படும் ஆன்றோர் வாக்குகட்கு அமைய- மனத்தின்பக்குவமே வாழ்வுஎனலாம்-சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளுமே எம்மை வழிநடத்துவதாகக் கூறும் மக்கள்- மனம் போன போக்கிலே வாழ்ந்து தமக்குத் தாமே சஞ்சலங்களைத்தேடிக் கொள்கின்றார்கள்.

உலகிலே படித்த பட்டம் பெற்ற பலரும் பண்பு கெட்டவர்களாகவும், படியாதவர்களாகவும், உலகம்தெரியாதோர் எனக் கருதப்படுபவர் பலரும் நல்ல பண்புள்ளங்

### நீர்வை மணி

கொண்டவர்களாகவும் காணப்படுவதற்குக்காரணம் அவரவர் மனமேயாகும்.

இதே போன்று பெரும் உழைப்பாளிகள் பலர் தமது ஊதாரித் தனத்தினால் சீரழிவதும், சிறு உழைப்பாளிகள் பலர் சிறப்பாகவும், கட்டுப்பாடாகவும் சமூகத்தில் மதிப்புடன் கண்ணியமாக வாழ்வதையும் நாம்நோக்குமிடத்து- மனத்தின் பக்குவமே இதற்குக் காரணம் என்பதை உணர முடிகின்றது.

எம்மில் பலபேர் மனமறிந்தே தவறுகள் செய்கின்றோம். இத்தகு தவறுகளே வாழ்வின் உயர்விற்கும், தாழ்விற்கும் வித்தாகி விடுகின்றன. தெரியாமற் செய்யும் தவறுகள் மன்னிக்கப்படுகின்றன. தெரிந்து செய்யும் தவறுகள் தொடர் துன்பங்களையே தருகின்றன எனலாம் இன்றைய உலகில் எங்கும், எதிலும் துன்பங்களும், சிரமங்களும் நிறைந்திருப்பதற்குக் காரணமே உள் ஒன்று வைத்துப், புறமொன்றாக எண்ணத்திலும், செயலிலும் தூய்மையற்ற மனப்பாங்கு காணப்படுவதேயாகும். இன்றைய நாட்டு நிலைமைகளும் சரி- நம் ஒவ்வொருவருடைய வீட்டு நிலைமைகளும் சரி இன்று நிம்மதியற்று, துன்பமும், சோகமும், இடர்மிகுதியுமாகக் காணப்படுவதற்கு முழுக்க, முழுக்கக் காரணம் மனித மனங்களின் பக்குவமற்ற, தூய்மையாற்ற சிந்தனைகளும், செயற்பாடுகளுமேயாகும்.

மனதைக் கட்டுப்படுத்தி நன்நெறிப்படுத்துதல் சிரமமான தல்ல சந்தர்ப்பம்-சூழ்நிலைகட்கு மத்தியில் தெளிவான சிந்தனையுடன் நம்மை நாமேவழிப்படுத்தமுயன்றால் முடியாததொன்றில்லை, உலகில் எத்தனை எத்தனை மகான்கள் எமக்கு வழிகாட்டிகளாக உள்ளனர், அவர்கள் நமக்குக் காட்டிய நல்வழிகளை நாம் நன்குணர்ந்து எமக்கு நாமே நல்லட்சியங்களை வகுத்துக் கொண்டு வாழத்தலைப்பட்டால் நமக்கும் நல்வாழ்வு அமைவதுடன் பிறர்க்கும் எம்வாழ்வு நன்நெறிப்பாதையாகத்திகழுமன்றோ?

உலகியல் வாழ்வில் துன்பப்படுபவர்கள் பலரையும், நல்வாழ்வு வாழ்பவர் பலரையும் நாம் நன்கு கவனிப்போமாயின் அவரவர் மனம்போல வாழ்வு அமைந்திருப்பதனை நன்றாக உணரலாம். உலகில் பலதரப் பட்டோருடனும் பழகுவதனாலும், பலதரப் பட்ட நன்நூல்களை வாசிப்பதனாலும், மனதில் எழும் நற்சிந்தனைகளே மனிதனை வழிநடத்துகின்றன - இதற்கான பக்குவப்பட்ட, நன்நோக்கம் நிறைந்தமனமே வேண்டுவதாகும். இறைவன் தந்த மனத்தினை நற்சிந்தனாவழிப்படுத்தி நாமும் நலன் வாழ்வதுடன், நாடும் நலம் வாழப் பக்குவப்படுத்துவோமாயின் மனம் போல வாழ்வு-நல்வாழ்வாயமையும் எனலாம். வாழ்க! வையகமும்! துயர்தீர்கவே.

மனம்எனும் தோணிபற்றி
　மதிஎனும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச்
　செறிகடல் ஓடும் போது
மதம்எனும் பாறை தாக்கி
　மரியும் போது அறிய ஒண்ணாது
உனை உன்னும் உணர்வைதல்காய்
　ஒற்றியூர் உடைய கோவே

(அப்பர் தேவாரம்)

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடும்?

## கட்சி வட்டாரங்கள் குழப்பம்

(கொழும்பு)

எதிர் வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் பங்குபற்றுவது தொடர்பாக இதுவரை எந்த விதமான தீர்மானமும் தமது கட்சி எடுக்கவில்லையென அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தற்போதையசூழ்நிலையில்

தமிழ்கட்சிகள் யாழ்ப்பாணத்தில் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ள இவ் வேளையில் சில வேண்டாத விபரீதங்களைத் தடுக்கும் வகையிலேயே இலங்கை தமிழர் காங்கிரஸ் மேற்படி நழுவல் போக்கினை கடைப் பிடித்து வருவதாக அரசியல்

### உற்சவம்

(அரியாலை)

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில் தேவி உற்சவம் இம் மாதம் 24 தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

அடுத்தமாதம் 1 ஆம் திகதி காலை 9. 30 மணிக்கு தேர்த் திருவிழாவும், 2 ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

(உ)

### மண்ணெண்ணெய் விநியோகம்

(புலோலி)

புலோலி ப. நோ. கூ: சங்கம், தனது பகுதியில் வாழும் க. பொ. த உயர்தர வகுப்பு மாணவர்களிற்கு மண்ணெண்ணெய் விநியோகத்தை மேற் கொண்டுவருகிறது.

இம்மாணவர்களிற்கு இது இரண்டாவது கட்ட மண்ணெண்ணெய் விநியோகம் ஆகும்.

(த-52)



முரண் பாடுகளை முற்ற விட்ட காரணத்தால் முகம் பார்க்க முடியாத குரோதங்கள் வளர்ந்தன. உண்மை நிலையை உணருகின்ற போது- உள்ளம்தெளிவடையும் போது ஆயுதங்கள் தாமாகவே மறையும். அன்பு சூழ்ந்த அமைதிநிலவும். மக்கள் வேண்டி நிற்கும்யுத்த நிறுத்தம் வந்துநிற்கும்.

அழிவுப்பாதை, பொருள் அழியும் பாதை என்று காலம் காலமாக சொல்லிக் கொண்டிருப்பவர்கள் கண்ணைக்கட்டிக் கொண்டு கிணற்றில் வீழ்பவர்களே. இத்தகைய குருடர்கள் வாழும் வரை நாடு இருளுடையதாகவே இருக்கும். துன்பச் சுமையுடையதாகவே அமையும்.

இத்தேக்க நிலை அகல வேண்டுமானால்மதம் பிடித்தவர்களின் கொக்கரிப்பு நீங்க வேண்டும். அரசுரிமையில் முழுமையைக் கேட்கவில்லை. உரிய பங்கினையே கேட்கிறார்கள். அது நீதியும் கூட.

-அன்புடன் ஆசிரியர்

காங்கிரஸ் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்,

தற்போதையசூழ்நிலையில் தேர்தலில் பங்கு பற்றுவது குறித்து கட்சி எதுவித முடிவும் எடுக்கவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்;

இந்த வேளையில் தமிழ் மக்களுக்கு தேவையான நிதி உதவிகளை வழங்கி, நிம்மதி பெறப் படவேண்டியது தமது கடமை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்;

...வல் போக்கினை கடைப் பிடித்து வருவதாக அரசியல் நோக்கர்கள் ஊகங்கள் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம்,

இவ்வருட ஆரம்பத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முன்னாள் தலைவர் குமார் பொன்னம்பலம், அவரது தமிழ் போக்குகொள்கைகளுக்கு எதிரானவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டமை தெரிந்ததே. (உ)

# பலமடங்கு விலைகொடுத்தே உதிரிப்பாகங்களைவாங்கவேண்டியுள்ளது

(யாழ்ப்பாணம்)

கொழும்பை விட மும்மடங்கு விலை கொடுத்தே உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்ய வேண்டிய நிலையில் வடபிராந்திய போக்குவரத்துச்சபை செய்யப்படுவதாகஅவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

இது தொடர்பாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த வருட இறுதிப் பகுதியின் பின்னர் வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்கு எவ்வித உதிரிப்பாகங்களும் இன்விநியோகிக்கப்பட வில்லை;

இதேவேளையில் பேருந்துகளில் பயணம்செய்யும்போது மக்கள் இருக்கைகளை கிறியும், கிழித்தும் இன்னும் சில சேதங்களையும் பேருந்துகளுக்கு ஏற்படுத்துகின்றனர்:

பல பிரச்சினைகளின் மத்தியில் மக்களுக்காக சேவையாற்றுகின்ற இவ் வண்டிகளை பாதுகாப்பதும் மக்களின் கடமையே. எனவே பிரயாணத்தில் ஈடுபடும் ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(க-12)



## சாயி அருளமுதம்

### ஒற்றுமை

இக்காலத்தில் ஒரு மகனும், தந்தை சொற்படி கேடபதில்லை. கணவனுக்கும் மனைவிக்குமிடையில் ஒற்றுமையில்லை. மாணவர்கள் ஆசிரியர்களை எதிர்க் கிறார்கள் இக்காலத்துக்கு இராமாயணம் இலட்சியமாகத் திகழ்கிறது.

சகோதரர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? கணவன் மனைவியர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? பெற்றோர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? சமூகம்எவ்வாறு இருக்கவேண்டும். இராமாயணம் உதாரணங்களுடன் காரணகாரியங்களுடன் சமுதாய அமைப்புக்களும் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தெளிவாக விளக்குகிறது.

நாம் சமூக நலனுக்காகப் பாடுபடப் பிறந்திருக்கிறோம் ஆகவே சமுதாயத்தில் தெய்வீக உணர்வுடன் ஈடுபடுத்திக் கொள்வோம். தெய்வீக உணர்வுடன் சேவை செய்யும் போது நம்மிடம் இறைமைத் தன்மை நிறையும், தெய்வத்துவம் நமக்குள் மறைந்திருக்கிறது. சேவையும் நாமஜபமும் தெய்வத்துவத்தை வெளிக்கொணர்கின்றன. ஆகவே இவை இரண்டையும் நாம் நன்கு பயன் படுத்திக்கொள்ளவேண்டும்.

நீங்கள் கல்வி கற்று, புத்தி சாலிகளாக இருப்பதால், உங்கள் விருப்பப்படியெல்லாம் உமதுகடமையை ஒழுங்காகச் செய்து இலட்சியமனிதராகத் திகழ வேண்டும்.

பாபா

விளையாட்டுச் செய்தி

★ தென்அமெரிக்க வலயத்துக்கான

## காற்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஆஜென்ரீனா அணி முன்னிலை

(கொழும்பு)

தென்அமெரிக்க வலயத்துக்கான உலகக் கிண்ண தகுதிகாண் காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆஜென்ரீனா அணி முன்னிலை வகிக்கின்றது.

பத்து நாடுகள் பங்கு பற்றும் இந்த தகுதி காண் சுற்றுப் போட்டியில் இதுவரை நடைபெற்ற 5 சுற்றில் ஆஜென்ரீனா அணி அதிக பட்சம் 15 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

முதலாவது உலகச் சம்பியனான உருகுவே 2 ஆம் இடத்தையும், கொலம்பியா, பராகுவே முறையே 3 ஆம். 4ஆம் இடத்தையும் வகிக்கின்றன.

இதுவரை சகல உலகக் கிண்ண காற்பந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றி வந்துள்ள பிறேசில் 5 போட்டிகளில் 7 புள்ளிகளை மட்டுமே பெற்று 5 ஆம் இடத்தில் இருக்கிறது.

முதல் நான்கு இடத்தைப் பெறும் அணிகள் தென் அமெரிக்க வலயத்திலிருந்து உலகக் கிண்ண இறுதிச் சுற்றில் விளையாடத் தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## வவுனியாவில் 13பரீட்சை நிலையங்களில் க. பொ. த.உயர்தரப்பரீட்சை நடைபெறும்

எதிர் வரும் க. பொ. த. உயர்தரப் பரீட்சை வவுனியாவில் 13 பரீட்சை நிலையங்களில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் 12 பரீட்சை நிலையங்களும், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் ஒரு பரீட்சை நிலையமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் 76 பாடசாலை மாணவர்களும், 13 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் 1279 பாடசாலை மாணவர்களும், 377 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இப் பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

இப் பரீட்சை ஜூலை 31 முதல் ஆகஸ்ட் 23வரை நடைபெறவிருப்பது தெரிந்ததே. (வ)

## மர்மப் பொருள் வெடிப்புச் சம்பவம் காயமடைந்த சிறுவன் மரணம்!

(வவுனியா)

பாண்டியன் குளப்பகுதியில் நேற்று முன்தினம் மர்மப் பொருள் ஒன்று வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த றொபோட் - றெறினோல்ட் (வயது 10) என்ற சிறுவன் நேற்று உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தினத்தன்று மூவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவர்கள் இளவாலைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பாண்டியன் குளம் பகுதியில் வசித்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வ.77)

**சரசாலையில்...**

மோட்டார் ஷெல் ஆர்.பி.ஜி போன்ற கனரகஆயுதங்களை விடுதலைப்புலிகள் பயன்படுத்தியதாகவும் புலிகள் தரப்பிலும் பலர் உயிரிழந்துள்ளதாகவும் ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-4)

**திருப்பி...**

ளது.

கூட்டணி உபதலைவர் வி. ஆனந்தசங்கரி, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வ

**சந்திரிகா...**

இவ்வார்ப்பாட்டபேரணியில் சுமார் 5ஆயிரம் மக்கள் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் உரையாற்

★ பளை, மருதங்கேணிப் பகுதியில் இருந்து

# இடம்பெயர்ந்த 115 குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு!

## நல்லூர் பிரதேச செயலர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதி பளை பிரதேச செயலர் பிரிவில் இருந்தும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்தும் இடம்பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் தஞ்சம் புகுந்துள்ள குடும்பங்களுள் சுமார் 115 குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்த இரண்டாயிரம் ரூபாவும் சம்பந்தப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பில் ஈடுவதற்கு ஏதுவாக யாழ். செயலகத்தினால் காசோலை எழுதப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பளையைச் சேர்ந்த 107 குடும்பங்களுக்கும் மருதங்கேணியைச் சேர்ந்த எட்டு குடும்பங்களுக்கும் முதற்கட்டமாக இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது. [வ]

## வன்னிப் பகுதியில் கண்டனப் பேரணி

[வவுனியா]

வன்னிப் பகுதி மீது மருந்துத்தடை, உரவகை, விவசாய இரசாயனப் பொருட்கள் மீதான தடையை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் நடைபெற்ற இக்கண்டனப் பேரணியில் பல்லாயிரக் கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டதுடன் தமது கண்டனத்தையும் வெளிப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. [ந 7]

## மாணவன் கைது

(கந்தர்மடம்)

யாழ். உயர்தொழில்நுட்பநிறுவனத்தில் HNDA பிரிவில்கல்வி கற்று வந்த 1ம்வருட மாலை நேரம் மாணவன் செ. மணிவண்ணன் கடந்த 23ந்திகதி அவரது வீட்டில்வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இவரது கைது தொடர்பாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க. 37)

**விறகுவெட்டச்...**

மதிக்கப்பட்டுள்ளார்.

ஏழு பிள்ளைகளின் தாயான சுப்பிரமணியம் இலட்சுமி (வயது 50) என்பவரே மேற்படி சம்பவத்தில் முழங்காலுக்குக் கீழ் காலை இழந்

## ஆறுகோரிக்கைகளை முன்வைத்து திருமலையில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

திருகோணமலையில்நேற்று ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

அகில இலங்கை சிங்கள ஆசிரியர் சங்கம் இவ் ஆர்ப்பாட்டப்பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.

★ தகுதியின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு பதவிஉயர்வு வழங்க வேண்டும்.

★ அடிப்படைச் சம்பளம் ஐயாயிரம் ருபாவுக்குக் குறையாமல் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் உட்பட ஆறு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் பேரணியில் சென்றவர்கள் ஆளுநரிடம் கையளித்தனர். (ந)

## "மோட்டோறோலா" தொலைபேசி இணைப்பு நேற்று முதல் இயங்குகிறது!

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடங்களுக்கான 'மோட்டோறோலா' தொலைபேசி இணைப்பு நேற்றுபிற்பகல் மூன்று மணி முதல்இயங்கத்தொடங்கியுள்ளதாக யாழ். ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தின் கிராமங்களின் மூலை முடுக்குகள் உட்பட 812 மோட்டோர்றோலா தொலைபேசி வசதி இருப்பதாகவும் இதில் சுமார் 600 மோட்டோர்றோலா உரிமையாளர்கள் பலர் கடந்த சித்திரை மாதம் முதல் கட்டணம் செலுத்தாமல் இருந்தபோதும் தற்போது சுணிசமானோர் தமது நிலுவைப்பணத்தை செலுத்தியுள்ளதாகவும் தரிவிக்கப்படுகிறது. (வ)

**ஐ. தே. க. --**

நிர்வாகசபை தொடர்பாகவும் அரசுக்கும், எமக்குமிடையே இணக்கம் காணப்பட்டிருந்த போதும், ஐக்கிய தேசியக் கட்சியுடனான பேச்சு வார்த்தையின் பின் அதில் அரசு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது வடக்குக் கிழக்கு இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பை பத்து வருடங்களுக்குப் பின் போடுமாறும் இடைக்கால நிர்வாக சபையை ஐந்து வருடங்களுக்கு இயங்கவைப்பதிலும் நாம் இணக்கம் கண்டிருந்தோம்.

இந்நிலையில் யுத்தத்தை உடன் முடிவுக்குக் கொண்டு

## செயலாளர் பதவியாருக்கு

(கொழும்பு)

அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க காலமானதை அடுத்து ஜனாதிபதி நாட்டில் இல்லாத நிலையில் அமைச்சர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க தலைமையில் நேற்று அமைச்சரவை தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்துள்ளது.

காலஞ்சென்ற அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க வகித்துவந்த பதவிக்கு யாரிடம் ஒப்படைப்பதென்பது தொடர்பாகவும்அவரது இறுதிக் கிரியைகள் குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதேவேளை அமைச்சர் ரட்னசிறி விக்ரநாயக்கவை அல்லது அமைச்சர் மகிந்த இராஜபக்சவை சுதந்திரக் கட்சியின் செயலாளராக

## திருப்பி...

ளது.

கூட்டணி உபதலைவர் வி. ஆனந்தசங்கரி, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, இ. துரைசிங்கம் யாழ். மாநகரசபை உறுப்பினர் எஸ். கணேந்திரன் ஆகியோரே ஜேர்மனி சென்றுள்ளனர். இத்தூதுக்குழுவினர் ஜேர்மன் வெளிநாட்டமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளனர்.

## சந்திரிகா...

இவ்வார்ப்பாட்டபேரணியில் சுமார் 5ஆயிரம் மக்கள் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் உரையாற்றிய ரணில்விக்கிரமசிங்க, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியாத அரசு உடன் பதவி விலகவேண்டுமென்றும், அடுத்த அரசை அமைக்க நாம் தயாரகிவருகிறோம் என்றும் கூறினார்.

(வ)

மதிக்கப்பட்டுள்ளார்.

ஏழு பிள்ளைகளின் தாயான சுப்பிரமணியம் இலட்சுமி (வயது 50) என்பவரே மேற்படி சம்பவத்தில் முழங்காலுக்குக் கீழ் காலை இழந்ததுடன் இடது காலிலும் படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்று நண்பகல் 2 மணியளவில் தனது சொந்தப்பாவனைக்காக விறகு வெட்டச் சென்றபோதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் இடம்பெற்ற பகுதிகளில் சிம்பாவேயின் கண்ணி வெடி அகற்றும் நிபுணர்களால் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(வ-4)

நிர்வாக சபையை ஐந்து வருடங்களுக்கு இயங்கவைப்பதிலும் நாம் இணக்கம் கண்டிருந்தோம்.

இந்நிலையில் யுத்தத்தை உடன் முடிவுக்குக் கொண்டுவரவும் யுத்தம் வேண்டாம் என மக்களை சந்திக்கு இழுத்துப் போராட்டம் மேற்கொள்ளவும் நாம் தயாராகி வருகிறோம் என்றும் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலர் நாயகமும் திருமலைஎம்.பி.யுமான இராசம்பந்தன் கருத்து வெளியிடுகையில் ஐக்கிய தேசியக்கட்சி ஒரு பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியில் இருந்தபோதும் தேசிய பிரச்சினையில் ஆக்கபூர்வமாக செயல்படவில்லை அதன் அணுகுமுறைநழுவல் போக்கினையே எடுத்துக் காட்டுவதாக உள்ளது என்றும் கூறினார்.

புளொட் எம். பி த. சித்தார்த்தன் கருத்துத் தெரிவிக்கையில், அரசியல் அமைப்புத் தீர்வு யோசனையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய அம்சங்கள் குறைக்கப்பட்டுள்ளன. தமிழ்க்கட்சிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களை ஆதரிக்க ஐக்கிய தேசியகட்சி முன்வர வேண்டும் பௌத்த சங்கத்தினர்எதிர்த்தது போல ஐ. தே. கட்சி எதிர்க்கக்கூடாதென்றும் கேட்டுக் கொண்டார்.

(வ)

பட்டது.

இதேவேளை அமைச்சர் ரட்னசிறி விக்ரநாயக்கவை அல்லது அமைச்சர் மகிந்த இராஜபக்சவை சுதந்திரக் கட்சியின் செயலாளராக நியமிக்கலாமென கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக ஜனாதிபதி நாடு திரும்பியதும் நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

(வ)

## போலி சி. ஐ. டி...

வதாகவும் இது குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் பொலிஸ், பொது மக்களின் நல்லுறவுப் பிரிவின் பணிப்பாளரான எஸ். எஸ். சி. றியென்சி பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

(வ-4)

## 5ம் ஆண்டு...

டுள்ளதாகபரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ள இக் கடிதங்களை எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெறாத அதிபர்கள் பத்தர முல்லையிலுள்ள பரீட்சைத் திணைக்களத்துடன் நேரடியாகவோ அல்லது 01- 889222 என்ற தொலைபேசி அழைப்பின் மூலமோ தொடர்பு கொள்ளலாம் என்று பரீட்சைத் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

(வ-4)


### யாழ்ப்பாண மாநகர சபை

# நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் உற்சவகாலத் தற்காலிக கடைகளை ஒழுங்குபடுத்தல்-2000

நல்லூர் மஹோற்சவ காலத்தில் கோவில் பிரதேசத்தை வர்த்தக மயமாக்காமல், அதன் புனிதத்தைப் பேணிக் காப்பதில் சகலரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தவிர்க்க முடியாதபடிவர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட விரும்புபவர்கள், 31-07-2000 ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு, அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

[கி/673]



# கஜன்

ஊர்காவற்றுறை

சரத்குமார் ஆனந்தபாபு
கவுண்டமணி செந்தில்
நடித்த

## சேரன் பாண்டியன்

காட்சி நேரம்
பி.ப 3.30 மணி

(கி/652)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ நிறுவனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.